# காட்டாறு

பருவம்: 1 புனல்: 1 அக்டோபர் 2014 தனிச்சுற்றுக்கு நன்கொடை: ரூ.20

## மதக்கட்டுக்களுக்கு எதிரான விடுதலை வெளி







# ஆரியப் பண்பாட்டு அழிப்புப் போரில்... காட்டாறு


**தொகுப்புக்குழு**
யாழ் மொழி
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
கொளத்தூர் குமார்
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு
பூ. மணிமாறன்

**சட்ட ஆலோசனைக்குழு**
வழக்கறிஞர் துரை.அருண்
வழக்கறிஞர் திருமூர்த்தி
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

**விளம்பரத் தொடர்பு**
சி. விஜயன் 94881 79109,
ஜீவாநகர் குமார் 99944 77013

**விற்பனைத் தொடர்பு**
ஆ. பாண்டியன் 96591 12891,
வெங்கட் 95788 44141

**சந்தா தொடர்பு**
அ. கிருட்டிணகுமார்
97882 97428

**வடிவமைப்பு, அச்சு**
செல்வக்குமார்
BS Graphics, Chennai

**அலுவலக நிர்வாகம்**
சி. இராவணன் 97868 89325

**ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு**
காட்டாறு, 1 / 810
முத்தமிழ்நகர், நத்தம் சாலை,
திண்டுக்கல் 624003
kaattaaru2014@gmail.com


வேதங்கள் கட்டாயப்படுத்தி, நிர்பந்தப்படுத்தி உருவாக்கி வைத்திருந்த ஆரியப்பண்பாட்டுக்கு எதிராகப் போராடிய பரிவிராஜகர்கள், கணாதர், கபிலர், சார்வாகர், புத்தர் என எண்ணற்ற தலைவர்களை, போராளிகளை வரலாறு நமக்கு அடையாளம் காட்டியது. அசோகர் காலத்திற்குப் பிறகு மிக நீண்ட இடைவெளி. சுமார் 20 நூற்றாண்டுகளாக, அந்நிய மதமான இந்துமதத்தின் வேதங்களே நம்மை ஆட்சி செய்து வருகின்றன.


இந்தியத் துணைக்கண்டப் பகுதியில் ஆரியப் படையெடுப்புக்குப் பிறகு எண்ணற்ற படையெடுப்புக்கள் நடந்திருக்கலாம். ஆட்சிகள் மாறியிருக்கலாம். சர்வதேச அளவில் அரசியலில் பெரும்புரட்சிகள் உண்டாகியிருக்கலாம். உலக மானிட சமுதாயம் ஆதிப் பொதுவுடைமை, பண்ணைஅடிமை, நிலப் பிரபுத்துவம், முதலாளித்துவம், சோசலிசம் என வளர்ந்துகொண்டு போயிருக்கலாம். மானுடவியல் பார்வையிலும் மனிதகுலம் பல்வேறு நிலைகளைக் கடந்து முன்னேறியிருக்கலாம். ஆனால் எந்தப் புரட்சியும், வளர்ச்சியும், படையெடுப்பும் இந்தியப் பகுதியில் வேதங்களின் ஆதிக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கவில்லை. ஆரிய ஆதிக்கத்தை அசைக்கவில்லை.

20 நூற்றாண்டுகளுக்குப் பிறகு பெரியார் பிறந்தார். தேங்கிக்கிடந்த - அழுகிக்கிடந்த சமுதாயத்தின் போக்கைத் தகர்த்து அறிவியல் அடிப்படையில் சமுதாயத்தை நகர்த்தத்தொடங்கினார். தமது திராவிடர் பண்பாட்டுப் புரட்சியால் ஆரியப்பண்பாட்டை அழிக்கத்தொடங்கினார். அதன் அதிர்வுகளால் ஆட்சிகள் மாறின; அதிகாரங்கள் மாறின; சட்டங்கள் மாறின.

அந்த திராவிடர் பண்பாட்டுப்புரட்சிக்குப் படைக்கலன்களாக எண்ணற்ற ஏடுகள் களமிறங்கின. ஊருக்கு ஊர் சிற்றிதழ்கள் தொடங்கப்பட்டன. காட்டாற்று வெள்ளமாய் பெரியாரின் சுயமரியாதைக் கருத்துக்கள் நாடெங்கும் பரவின. அந்த ஏடுகளின் தொடர்ச்சியாகவே இந்தக் காட்டாறு.

தற்காலச் சூழலில் பெரியாரியலை நடைமுறைப்படுத்த அடுத்தத் தலைமுறைக்கு வழிகாட்ட காட்டாறு வருகிறது. அறிவியல் பண்பாட்டை, திராவிடர் பண்பாட்டை அறிவிக்க விரும்புபவர்கள் எழுதுங்கள். அறிய விரும்புபவர்கள் படியுங்கள். வளர்க்க விரும்புபவர்கள் ஆதரவளியுங்கள். இளைய தலைமுறையைச் சேர்ந்த படைப்பாளர்கள், வாசகர்கள், ஆதரவாளர்கள் இவர்களுக்காகவே காட்டாறு.

தோழமையுடன் தொகுப்புக் குழு



# சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு

1

அரசூர் அ.ப.சிவா

இன்றைய சூழலில் ஒரு தனி மனிதன் தன் இருத்தலையும் அடையாளத்தையும் நிலைநிறுத்திக் கொள்ள எவை தேவை, அவனுடைய அகம் - புறம் சார்ந்த எந்தவொரு முயற்சிக்கும் தன்னுடைய படிப்பு , அனுபவம் திறமை இதையெல்லாம் தாண்டி சமூகத்தின் ஒரு பகுதியாக அவன் வாழும் போது தனக்கான வாழ்வியல் நெறிகளுக்கு மதம் என்று ஒன்று தேவைப்படுகிறது, என நம்பி அதன் நோக்கை உணர்ந்தோ, உணராமலோ மதத்தை பின்பற்றுகிறான்.

தன் வாழ்வில் மற்றவரை ஒடுக்காமல் தன் வாழ்வையும் சமூகத்தையும் வளர்ச்சி நோக்கில் பார்ப்பவர்களுக்கு என்ன தேவை பெரியார் சொல்கிறார்,

“உலக வாழ்வில் மற்றொருவனுக்கு இம்சையின்றி பிறருக்கு எப்படி உபயோகப் படுவது என்பதையேதான் முக்கியக் கொள்கையாக கொண்டுழைப்பவனுக்கு வேறு மதம் வேண்டுவதில்லை என்பதுடன் தேவகுமாரனும், நபியும், ஆழ்வாரும், ஆச்சாரியார்களும், நாயன்மார்களும், தெய்வீகமும், அற்புதங்களும் வேண்டியதில்லை எனபதே என் முடிவு. அம்மாதிரி தருமத்தையே அனுபவமாக்கத்தக்க விதமாய் இப்போது போதிக்கத்தக்க மதமெதுவுமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அப்படி இருப்பதாக இப்போது சொல்ல வருவதெல்லாம் ஏதோ செல்லரித்த ஏட்டை எடுத்துக்கொண்டு வந்து இதோ பார், நீ சொல்வதெல்லாம் இதில் எழுதியிருக்கிறது என்று காட்டப்படுவதன்றி சமூக வாழ்க்கையின் அனுபவத்திலிருக்கின்றதெனச் சொல்லப்படும் மதமோ சமயமோ ஒன்றுமில்லை. இவ்வளவு மதங்கள் சமயங்கள் இருந்தும் அனுபவத்திற்கும் இயற்கை இன்பத்திற்கும் ஒத்தது எது? அவசியமானது எது? என்று கண்டுபிடிக்கத்தான் வேண்டியிருக்கின்றதே ஒழிய தாராளமாய் பின்பற்ற ஒரு சமயமும் இடம் கொடுக்கவில்லை. அந்த விதமான ஒரு நிலைமை மனித சமூகத்திற்கு ஏற்பட்டாலொழிய மனித சமூகம் ஒற்றுமையுடனும் அன்புடனும் சுதந்திரத்துடனும் வாழ்வது கஷ்டந்தான். நாளுக்கு நாள் புதிய மதங்கள் உற்பத்தியாவதும் பழைய மதங்களுக்கு

புதிது புதிதான பாஷியமும் பொருளும் சொல்லிப் பிரச்சாரங்கள் மிகுந்து கொண்டுமிருக்கின்றனவேயன்றி மனித சமுகத்தின் அவசியம், தன்மை, கடமை முதலியவை என்னவென்றும் இத்தகைய பாஷியங்களும் மதமும் அவற்றிற்கு ஏற்றவைகளாயிருக்கின்றனவா ? என்றும் ஆலோசிப்பார் யாருமில்லை.

- பெரியார்- 15. 04. 1928 குடி அரசு

ஆக அனுபவத்திற்கும் இயற்கை இன்பத்திற்கும் எதிராக இருப்பவைகளையும் நாம் ஏன் ஏற்க வேண்டும்? என கேள்வி எழுகிறது?

இந்திய வரலாற்றில் பகவத் கீதையில் பிரேம்நாத் பசாஸ் இப்படி கூறுகிறார் .

"இயற்கையைக் கூர்ந்து கவனிப்பதன் மூலமும் கடந்த கால அனுபவத்தின் மூலமும் அவனுக்கு கிடைக்கும் அறிவானது சுயசார்பானவனாகவும் தனது எதிர்காலத்தை, தானே உருவாக்கி கொள்பவனாகவும் அவன் மாறுவதற்கு உதவுகிறது. புலனறிவுக்கு அப்பாற்பட்ட உள்ளுணர்வு என்பது பகுத்தறிவை மறுக்கக் கூடியது. அந்த உள்ளுணர்வு விரைவிலோ, தாமதித்தோ சிந்தனையில் குழப்பத்தை ஏற்படுத்தி இறுதியில் மதநம்பிக்கையில் புகலிடம் தேட வைக்கிறது. இயற்கையை விளக்குவது மதத்தின் நோக்கமல்ல. இயற்கையின் புதிர்களுக்கும் மனிதனின் புரிதலுக்கும் இடையில் தடைச்சுவர்களை எழுப்புவதுதான் மதத்தின் நோக்கம்."

ஆக, மதம் ஏற்படுத்தும் தடைச்சுவர்களை உடைத்தெறியவும், மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்தாத சமத்துவத்தை, மனிதநேயத்தை ஏற்படுத்துகின்ற வாழ்வியல் நமக்கு அவசியம்.

இன்றிருக்கின்ற உலகமய, தனியார்மய, தாராளமய பொருளியல் சூழல் என்பது முடிந்தவரை மனிதனை உதிரிகளாக்கி பொருள் என்ற இலக்கு நோக்கி ஓடும் பந்தயக்குதிரையாக்கி உள்ளது. இந்த ஓட்டம் வேகப்பட, வேகப்பட பொருள் குவியும் போது தனி மனிதன் தன்னையும், தான் சேர்த்த பொருளையும் பாதுகாக்க வழிதேட வேண்டியுள்ளது. அதன் பொருட்டு மட்டுமே, அவன் அரசியல்படுத்தப் படுகிறான். மற்றோர் சாரார் தன் வாழ்விற்கான பொருளைத் தேடி, தன் இறுதி வாழ்நாள் வரை ஓடிக்கொண்டே இருக்கிறார்கள். இப்போது இயற்கைக்கும் மனிதனுக்குமான சுவராக மதம் எழுகிறது. இவர்களைப் பயன்படுத்தி பொருள்

> **“ இயற்கையின் புதிர்களுக்கும் மனிதனின் புரிதலுக்கும் இடையில் தடைச்சுவர்களை எழுப்புவதுதான் மதத்தின் நோக்கம். ”**

சேர்க்க ஆதிக்கக் கூட்டம் தயாராகி விடுகிறது. சமயங்கள், தத்துவங்கள், கோட்பாடுகள், இயக்கங்கள் இவைகளின் பாதிப்பில்லாமல் தனி மனிதன் தம் இயற்கை இன்பத்திற்கான வாழ்வை வாழ்கின்றானா? என்ற கேள்வி நம் முன்...

இந்திய சூழலில் பொரும்பாலான மக்கள் இந்து மதத்தைச் சார்ந்தே வாழ்கிறார்கள். இன்று அமைந்திருக்கும் அரசு ஒரே கலாச்சாரம், பண்பாடு பற்றியெல்லாம் பேசிவருகிறது. வேற்றுமையில் ஒற்றுமை என்பது போன்ற இவர்களின் பழைய முழக்கங்கள் விழி பிதுங்கி நிற்கிறது .

இப்படியான இக்கட்டான சூழலில் இந்து வேத வாழ்வியலுக்கெதிரான - மதங்களைக் கடந்து மாற்று வாழ்வியலை ஏற்றுக்கொண்டிருக்கின்ற - எண்ணிக்கையில் மிகக்குறைவாக இருக்கிற நம்மைப் போன்ற மாற்று சிந்தனையாளர்களின் வாழ்வியல் எப்படியானதாக இருக்க வேண்டும்? வெகுஜன மக்கள் தங்கள் வாழ்வியல் முறைகளை ஏன் மாற்றிக்கொள்ள வேண்டும்? இந்து வேத வாழ்வியலால் மக்களுக்கும் அவர்களின் விருப்பத்திற்கும் எற்படும் இழப்புகள் என்ன? இப்படியாக ஆயிரம் கேள்விகள் நம் முன்?

விடை காண்போம் ...

**வினா:** அய்யா, தொழிலாளி நிலை உயர வேண்டுமானல் என்ன செய்ய வேண்டும்?

**விடை:** தொழிலாளி உயர வேண்டுமானால், தொழிலாளி என்கிற பிரிவு ஒழிய வேண்டும். தொழிலாளி நிலை உயர வேண்டுமானால் முதலாளி என்கிற வார்த்தையே - பிரிவே ஒழிய வேண்டும். தொழிலாளி என்ற வார்த்தையே அகராதியில் இருக்கக் கூடாது என்பதுதான் இன்றைய அறிவுக்கேற்ற நிலைமைக் கேற்ற கருத்தாகும். முதலாளி - தொழிலாளித் தன்மை முறை இருக்கவே கூடாது. ஒரு தொழிற்சாலைக்கு அங்கு வேலை செய்பவர்கள் பங்காளிகளாக அல்லாமல் கூலிக்காரர்களாக இருப்பது முட்டாள் தனம். அடிமைத் தனம் மானமற்றதனம்.

# மருந்தாகும் மாட்டின் கழிவுகள்




## மனிதகுலத்திற்கு ஒரு அவமானம்


- சீனிவாஸ் கக்கிலயா - தமிழில்: யாழ்மொழி

மாடு, விவசாய நடவடிக்கைகளில் உதவ மனிதனால் வளர்க்கப் படும் ஒரு விலங்காகும். இப்போது விவசாயத்திற்குப் பயன் படுத்தப்படும் வலிமைமிகு இயந்திரங்கள், விவசா யத்திற்கும் இந்த விலங்குகளுக்கும் பொருத்தமற்ற சூழலை ஏற்படுத்திய போதிலும், இந்தியாவில் ‘இரண்டாம் தாய்’ அல்லது ‘உலகின் தாய்’ என்று கூட அழைக்கப்படும் மாடுகளின் ‘மேன்மைமிகு’ நிலையைப் பாதுகாக்க, பெரும் முயற்சிகள் செய் யப்பட்டு வருகின்றன. ‘தாயாகப் போற்றப்படும் மாட்டைப்’ பாதுகாக்க நடத்தப்படும் கடுமை யான போராட்டங்கள் மற்றும் கலவரங்கள், தலித்கொலைகள் ஆகியவை உலகின் இந்தப் பகுதியில் ஓர் இறந்த மாட்டை விட மனித வாழ்க்கை மிகக் குறைந்த முக்கியத்துவம் பெறுகிறது என்பதை எடுத்துக் கூறுகின்றன. மாட்டிற்குக் கொடுக்கப்படும் இந்த அசாதாரண மரியாதையே, மாட்டிலிருந்து சுரக்கும் பொருட் கள் மற்றும் கழிவுப் பொருட்களைச் சந்தைப்படுத் தவும், மேலும் இந்த கழிவுகள் பாலை விட ‘இலாபகரமாக’ இருக்கலாம் என்ற கூற்றுக்கும் வழிவகுக்கின்றது.

மாட்டின் பால் மற்றும் கழிவுகளில் இருந்து தயாரிக்கப்படும் பொருட்களின் பட்டியல் மிகவும் நீண்டது. அவற்றில் பஞ்சகவ்யம் (Panchagavya) மற்றும் மாட்டுச் சிறுநீர் வடிநீர்மம் (gau arka) ஆகியவை மிகவும் முக்கியமானவை. பஞ்சகவ்யம் என்பது மாட்டிலிருந்து பெறப்படும் சாணம், சிறுநீர், பால், நெய் மற்றும் தயிர் ஆகிய ஐந்து பொருட்களின் கலவை. மாட்டுச் சிறுநீரிலிருந்து பெறப்படும் மூன்று தயாரிப்புகள்

அதாவது : 1. gau-mutra asav (அல்லது நொதித்த தயாரிப்பு) 2. gau-arka (அல்லது வடிநீர்மம்) 3. Ganavati (அல்லது மாத்திரை) மருந்தாகப் பயன்படுத்தப் படுகின்றன. வடிநீர்மத்திற்காக இரண்டு அமெரிக்கக் காப்புரிமைகள் பெறப்பட்டதோடு அந்தச் செய்தி மீண்டும் மீண்டும் பரபரப்பாக பரப்பப்படுகிறது. மாட்டில் இருந்து பெறப்படும் பல்வேறு பொருட்கள், நூற்றுக்கும் மேற்பட்ட நோய்களுக்கு (காய்ச்சலில் இருந்து புற்றுநோய் வரை) ஒரு வெற்றிகரமான தீர்வு என கூறப்படுகி றது. பஞ்சகவ்யம், ஒரு குடும்ப உறுப்பினரின் பிறப்பு மற்றும் மரணத்தைத் தொடர்ந்து ‘உடல் மற்றும் ஆன்மா சுத்திகரிப்பானாகப்’ மிகுந்த பக்தியுடன் பயன்படுத்தப்படுகிறது. இதை ஒரு மருந்தாகவும், பூச்சிக்கொல்லியாகவும் மற்றும் மண்ணை வளப்படுத்தும் உரமாகவும் பயன்படுத்த ஆலோசனைகள் வழங்கப் படுகின்றன.

சமீபத்தில், பஞ்சகவ்யம் “சிக்கன்குன்யா” விற்கு ஒரு தீர்வு என கூறப்பட்டது. மாட்டுச் சிறுநீரிலிருந்து கூந்தல் தைலம், ஷாம்பு, தோல் கிரீம் போன்றவை தயாரிக்கப்படுகின்றன.



> 21 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டு, மாட்டின் கழிவுப் பொருட்களின் பயன்பாட்டை நியாயப்படுத்த, எப்படி பண்டைய உரையைச் சார்ந்திருக்க முடியும்?

மாட்டுச் சாணத்தில் இருந்து தயாரிக்கப்படும் சோப்பு, மூக்குப்பொடி, பவுடர், உடல் கிரீம், ஊதுபத்தி, பல் பொடி போன்றவை மருத்துவ பயன்பாட்டிற்குப் பரிந்துரை செய்யப்படுகின்றன. மாட்டிலிருந்து பெறப்படும் இம்மருந்துகளுக்கு மேலும் புனிதம் சேர்க்க, தூய இந்திய இன மாடுகளுக்கு 90% இருந்து 98% வரை 'நோயெதிர்ப்பு சக்தி' உள்ளதாகவும் கலப்பு இன மாடுகளுக்கு 40%-க்கும் குறைவாகவே நோய் எதிர்ப்பு சக்தி உள்ளதாகவும் கூறி வருகின்றனர்.

**முன் வைக்கப்படும் ஆதாரம்**

பஞ்சகவ்யம் பற்றி அறிய ஆர்வம் கொண்டு, நான் அதன் பயன்பாடு பற்றி ஒரு ஆயுர்வேத மருத்துவரிடம் கேட்டேன். அவர் சாரகா சம்ஹிதாவை **(Charaka Samhita)** மேற்கோள் காட்டி, மாட்டின் சிறுநீர் **(gau mutra),** மாட்டுச் சாணம் **(gau maya)** மற்றும் பஞ்சகவ்யம் பற்றி அனைத்து நற்பண்புகளையும் எனக்கு எடுத்துரைத்தார். ஆனால் நாம் நவீன ஆராய்ச்சி முறைகள் வந்துவிட்ட 21 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டு, மாட்டின் கழிவுப் பொருட்களின் பயன்பாட்டை நியாயப்படுத்த, எப்படி பண்டைய உரையைச் சார்ந்திருக்க முடியும்? என்று நான் ஆச்சரியப்பட்டேன். இவை அனைத்தும் சாரகா சம்ஹிதாவிலேயே நன்கு ஆராயப்பட்டிருப்பதாக அவர் என்னிடம் கூறினார். ஆனால் உயிர்வேதியி யல் மூலக்கூறுகள் மற்றும் நவீன உயிர்வேதியியல் பகுப்பாய்வுகள் மற்றும் நுண்ணுயிரிகள், அவற்றைத் தனிமைப்படுத்தும் முறைகள் போன்றவை சாரகாவின் காலத்தில் இல்லையே! என்று நான் பதிலடி கொடுத்தேன். ஆனால் பசுவின் சிறுநீர் சாரகாவின் காலத்திலிருந்து மாறவில்லை என்றார் அவர். என்னால் எதுவும் பேச இயலவில்லை.

மாட்டின் கழிவுப் பொருட்களின் நற்பண்புகளை விளக்கும் பெரும்பாலான கட்டுரைகள் பெரும்பாலும் புராண மற்றும் வேத நூல்களையும் சாரகா சம்ஹிதாவையுமே **(Charaka Samhita)** மேற்கோள் காட்டுகின்றன. அவ்வாறு முன் வைக்கப்படும் சில வாதங்கள்:

- மாடு நம் தாய்; நாம் அதன் குழந்தைகள். அதனால் மாட்டின் சிறுநீர் நன்மை பயக்கும்.
- நோய்கள் பித்த நீர் **(bile)**, சளி **(mucus)** மற்றும் காற்று ஆகியவற்றின் சமச்சீரற்ற நிலையால் ஏற்படுகின்றது. மாட்டுச்சிறுநீர் அவற்றை சமநிலைப்படுத்துகிறது.
- சிறுநீர்களில் மாட்டுச் சிறுநீரே சிறந்தது.
- கங்கா மாட்டுச் சிறுநீரில் வாழ்கிறது மற்றும் அதில் செம்பு மற்றும் தங்க உப்புக்கள் உள்ளன. மாட்டுச் சிறுநீர் கெட்டுப் போகாது; அது நாள்பட நாள்பட மிகவும் பயனுள்ளதாக பக்குவமடைகிறது.

சமீபத்தில் மாட்டுச் சிறுநீர் காப்புரிமையைப் பற்றி நிறைய எழுதப்பட்டு வருகிறது; ஒன்று, மாட்டு சிறுநீர் வடிநீர்மத்தைப் பயன்படுத்தி நுண்ணுயிர்க் கொல்லிகள் மற்றும் புற்றுநோய் மருந்துகளின் செயல்திறனை மேன்மைப்படுத்துவது பற்றி ஆய்வக ஆய்வுகள் அடிப்படையில் பெறப்பட்டது; மற்றொரு காப்புரிமை மாட்டு சிறுநீரை வைத்து செய்யப்படும் சிகிச்சை பற்றியதாகும்.

மாட்டு சிறுநீரைக் கொண்டு செய்யப்படும் சிகிச்சை பற்றி மியான்மரில் இருந்தும், மாடு சிறுநீர் கலவை - வலிப்பு நோய்க்கு ஒரு பாரம்பரியத் தீர்வு என்று நைஜீரியாவில் இருந்தும் அறிக்கைகள் உள்ளன. மேலும் மூட்டு

**“ பண்டைய ஆயுர்வேத நூல்களில், மாட்டு இறைச்சியின் சிகிச்சை பயன்பாடுகள் பற்றியும்தான் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் இந்த உண்மையை “மாட்டின் சிறுநீர் ஆதரவாளர்கள்” எங்கும் குறிப்பிடவில்லை ”**



வாதம் (gouty arthritis), லிம்போசைட் (lymphocyte), பாலிமார்போநியூக்லியர் செல்கள் (polymorpho nuclear cells) மற்றும் கார்பன் டெட்ரா குளோரைடு நச்சாகுதல் ஆகியவை மாட்டுச் சிறுநீர் வடிநீர்மத்தைக் கொண்டு விலங்குகள் மேல் சோதனை செய்யப்படுவதாக அறிக்கைகள் உள்ளன. இந்த முடிவுகள் சுதந்திரமாக மதிப்பீடு செய்யப்பட்டு, பெறப்பட்ட முடிவுகள் தான். இன்று கிட்டத்தட்ட மனிதனுக்கு உள்ள அனைத்து நோய்களையும் தீர்க்கும் ‘மந்திர சக்தி’ மாட்டுச் சிறுநீரில் உள்ளது என்று வரையறுக்கப் படுகிறது. இந்திய அரசின் விவசாய அமைச்சகத் திலுள்ள கால்நடைத் துறை, மாட்டு சிறுநீரில் நோய் தீர்க்கும் திறன் உள்ளது என்று சந்தைப்ப டுத்துவதை ஊக்குவிக்கும் வண்ணம் சில அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

**உண்மை நிலை:**

மாட்டின் கழிவுப் பொருட்களை மின்னல் வேகத்தில் சந்தைப்படுத்துவதன் மூலம், அரசின் முழு ஆதரவோடு ஆதரவற்ற நோயாளிகளின் தொண்டைகளுக்குள் அவற்றை தள்ளுவதால் ஏற்படும் உண்மையான ஆபத்துகளைப் பற்றி சில தகவல்களை நாம் அறிந்து கொள்ள வேண்டிய தருணம் இது. “மாட்டுச் சிறுநீர் விளம்பரதாரர்”களின் கபட நாடகத்தை அம்பலப்படுத்த மாட்டின் சிறுநீரை “எல்லா நோய்களையும் குணப்படுத்தும் மருந்து” என்று சொல்ல, முதன்மையான ஆதாரமாக உள்ள ஆயுர்வேத நூல்களைத் தாண்டி வெகு தூரம் செல்ல வேண்டியதில்லை. சாரகா (1, 2 ஆம் நூற்றாண்டு), சுஸ்ருதா (3, 4 ஆம் நூற்றாண்டு) மற்றும் வக்பதா (7 ஆம் நூற்றாண்டு) ஆகியோர் எழுதிய மூன்று முக்கிய பண்டைய ஆயுர்வேத நூல்களில், மாட்டு இறைச்சியின் சிகிச்சை பயன்பாடுகள் பற்றியும்தான் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் இந்த உண்மையை “மாட்டின் சிறுநீர் ஆதரவாளர்கள்” எங்கும் குறிப்பிடவில்லை. பண்டைய இந்திய பாரம்பரியத்தின் பாதுகாவலர்களின் பொய்யான கூற்றின் படி, மாட்டிறைச்சி சாப்பிடுவது பாவம்; ஆனால் அதன் சாணம் மற்றும் சிறுநீர் உடல்நலத்திற்கு நல்லது.

அப்படியானால், அதிகம் பேசப்பட்ட மாட்டின் சிறுநீர் பற்றிய காப்புரிமைகள்? காப்புரிமை என்பது ஒரு கண்டுபிடிப்பாளருக்குத் தன் கண்டுபிடிப்பை மற்றவர்கள் உருவாக்குவதையோ, பயன்படுத்தவதையோ, விற்பனை செய்வதையோ அல்லது இறக்குமதி செய்வதையோ தவிர்ப்பதற்காக ஓர் அரசால் வழங்கப்படும் பிரத்தியேக உரிமைகளின் தொகுப்பு ஆகும். ஒரு காப்புரிமையை அந்தத் தயாரிப்பின் பயன்பாட்டிற்கு ஆதாரம் என்று கருத முடியாது. இதில் நம்மை ஆச்சரியப்படுத்துவது என்னவெனில், மாட்டின் சிறுநீர் மற்றும் அதன் பொருட்களுக்கு சர்வதேசக் காப்புரிமைகள் இருக்கும் வேளையில், இந்திய அரசால் எந்த காப்புரிமையும் வழங்கப்படவில்லை. இந்தியக் காப்புரிமை என்பது விளம்பரத்தை தரக்கூடிய பரபரப்பான செய்தி மதிப்பைக் கொண்டதில்லை. ஆனால் சர்வதேச காப்புரிமை என்பது வெளிநாட்டவரும் மாட்டின் சிறுநீரின் நற்பண்பு களை ஏற்றுக் கொண்டனர் என்று கூற உதவுமல்லவா!

மாட்டின் கழிவுப் பொருட்களின் சிகிச்சைத் திறன் பற்றி உள்ள அறிக்கைகள் அனைத்தும் விலங்குகள் அல்லது திசுக்கள் மீது நடத்தப்பட்ட சிறிய ஆய்வுகளாக இருக்கின்றன. ஆய்வு அறிக்கைகள் என கோரப்படுபவை அனைத்தும் எந்த ஒரு அறிவியல் தரத்திற்கும் பொருந்தாத, ஏமாற்று அறிக்கைகளாகவே உள்ளன. இவற்றையும் ‘மாட்டு சிகிச்சை’ மேற்கொள்பவர்களின் கூற்றுகளையும் தாண்டி,

மனிதர்கள் மேல் நடத்தப்பட்ட எந்த திட்ட மிட்ட உறுதி அளிக்கும் ஆராய்ச்சிகளும் நடைபெறவில்லை. அந்த ஆய்வு அறிக்கைகளில் உள்ள கூற்றுகள் தங்களுக்குள்ளேயே முரண் பட்டு நிற்கின்றன. எடுத்துக்காட்டாக, சிறுநீரில் தங்கம் மற்றும் தாமிர உப்புக்கள் உள்ளன என்ற கூற்றுக்கான எந்த ஆதாரமும் பசுக்கழிவு ஆதரவாளர்களே வழங்கிய தரவுகளில் கூட இல்லை.

சிறுநீர் என்பது சிறுநீரகத்தால் வடிகட்டப்பட்டு, சிறுநீரக மண்டலத்தால் வெளியேற்றப்படும் ஒரு திரவக் கழிவாகும். அதில் மனித உடலுக்குத் தேவையற்ற பல கரைபொருட் கள்(**solutes**) மற்றும் உயிரியல் பொருட்களும் உள்ளன. மனித மற்றும் விலங்குகளின் சிறுநீரில் உள்ள இரசாயனப் பொருட்கள் கிட்டத்தட்ட ஒரே மாதிரியானவையே. எடுத்துக்காட்டாக, யுரோக்கினேஸ் (**Urokinase**) என்பது சிறுநீரில் அடைப்புகள் ஏற்படுவதைத் தடுக்க சுரக்கும் ஒரு நொதியம் (**enzyme**) ஆகும். அது மனித சிறுநீரில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு மாரடைப்பால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு இதய தமனிக ளில் (**coronary artery**) உள்ள அடைப்புகளைத் தகர்க்கப் பயன்படுத்தப்படுகிறது. அதற்காக மாரடைப்பு ஏற்பட்ட ஒருவருக்கு அவரது சிறுநீரைக் குடிக்கச் சொல்வது நியாயமாகுமா?

பசுவின் சிறுநீர் மனிதர்களுக்குப் பாதுகாப்பானதா? மாட்டின் சிறுநீர் கலவைகளை உட்கொள்வதால் ஏற்படும் கடுமையான பாதகமான, அபாயகரமான விளைவுகளை எடுத்துக் கூறும் சோதனை ஆதாரங்கள் உள்ளன. மேலும் தொற்று நோய்கள், குறிப்பாக லெப்டோஸ்பிரோசிஸ் (**leptospirosis**) வாய் வழிச் சளி மூலம் பரவுவதற்கு மாட்டின் சிறுநீரைக் குடிப்பது ஒரு முக்கியக் காரணமாகும். மாட்டுச் சிறுநீர் மற்றும் மாட்டுச் சாணம் கிருமிநாசினிகள் என்று கூறப்படுவது ஆதாரமற்ற, ஆபத்தான தவறான கூற்றாகும். குடலில் இருந்து வெளியேற்றப்படும் மாட்டுச் சாணத்தில் (மற்றும் அனைத்து மல விஷயம்) பாக்டீரியாக்கள் நிரம்பி வழியும் போது பஞ்சகவ்யத்திலும் பாக்டீரியாக்கள் இருக்கும். காயங்கள் மீது இந்த பாக்டீரியா நிறைந்த கழிவுகளைப் பூசினால் உயிருக்கே அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய சீழ்ப்பிடிப்பு ஏற்பட வழி வகுக்கும். இவற்றைப் பற்றி போதிய அறிவில்லாதவர்களால் மட்டுமே மாட்டுச் சிறுநீர் மற்றும் மாட்டுச் சாணத்தைக் கிருமிநாசி னிகள் என்று துணிச்சலோடு சந்தைப்படுத்த முடியும். ஆனால் சோகம் என்னவென்றால் தங்களின் மதங்களையோ ‘ஆன்மீகத் தலைவர்க ளையோ’ கண்மூடித்தனமாக நம்புவதால் சில நவீன மருத்துவர்கள் கூட அத்தகைய பிதற்றல் களுக்கு ஆதரவாக நிற்கின்றனர்.

> **“ மாட்டுச் சாணத்தில் பாக்டீரியாக்கள் நிரம்பி வழியும் போது பாக்டீரியா நிறைந்த கழிவுகளைப் பூசினால் உயிருக்கே அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய சீழ்ப்பிடிப்பு ஏற்பட வழி வகுக்கும். ”**

**முடிவுரை:**

இதிலிருந்து தெளிவாகத் தெரிவது என்னவென்றால், மாட்டின் சிறுநீர் மற்றும் மாட்டுச் சாணம் ஒரு விலங்கின் உடலிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப்பொருட்களே ஆகும்; மேலும் அது மனிதன் மற்றும் இதர விலங்குகளின் கழிவுகளைப் போன்றதே ஆகும். அதனால் மாட்டின் சிறுநீர் மற்றும் மற்ற கழிவுகள் மனிதர்கள் மற்றும் இதர விலங்குகளின் கழிவுகளை விட மதிப்பிற்குரியது என்று கூற முற்றிலும் எந்த காரணமும் இல்லை. எல்லா நோய் சிகிச்சையிலும் மாட்டின் கழிவுகளின் (மற்றும் அவற்றின் தயாரிப்புகள்) திறனை உறுதி செய்யும் வகையில் மனிதர்கள் மேல் இந்த பொருட்களின் பயன்பாடு குறித்த மருத்துவப் பரிசோதனைகள் இல்லை.

மாட்டின் கழிவுகளின் (மற்றும் அவற்றின் தயாரிப்புகள்) பயன்பாட்டினால் ஏற்படும் பாதகமான விளைவுகள் பற்றி கிடைக்கும் தகவல்களின்படி, அரசு இது போன்ற பொருட்களை ‘அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை’ அளிக்கும் அதிசய மருந்துகள் போன்று தம்பட்டம் அடித்து விற்பனை செய்ய அனுமதி அளிப்பது ஆச்சரியமாக இருக்கிறது. பசுவின் கழிவுகள் பயன்பாடு பற்றிய பிரச்சாரம் அதிக அளவில் பிற்போக்கு மற்றும் இந்து மத

அடிப்படைவாத சக்திகள் மூலம் உருவாக்கப்பட்டது. மேலும் 'சிகிச்சை' மற்றும் 'நீண்ட வாழ்க்கை'க்காக மாட்டு மலம் மற்றும் கழிவுகளை சாதாரண மனிதர்கள் உட்கொள்ள வேண்டும் என்று கூறுவது கண்டிக்கத்தக்கது. அதே இந்து அடிப்படைவாதிகளால் மனிதக் கழிவுகளைக் கூட சாப்பிட வேண்டிய கட்டாயம் - கொடுமைக்கு உட்படுத்தப்படுகின்ற தலித்களுக்கு ஏற்பட்ட நிகழ்வுகளைக் காணும்போது, இது ஆச்சரியப்படுவதற்கில்லை!

பசுவை (எருமை மற்றும் சமமான பயனுள்ள மற்ற கால்நடைகள் அல்லாது) 'இரண்டாவது தாய்', 'கடவுளின் தாய்', 'உலகின் தாய்', என்றெல்லாம் கூறுவது அது பால் கொடுக்கிறது என்ற காரணத்தால் தான் (கழிவுகளால் அல்ல) என்பது தாய்மை என்ற கருத்தைப் பற்றி ஒரு அடிப்படைக் கேள்வியை எழுப்புகிறது. நாம் நம் தாய் நமக்குத் தாய்ப்பால் தந்துள்ளார் என்பதால் மட்டுமா அன்பு செலுத்தி மதிக்கிறோம்? பசுவின் பொருட்கள் விற்பனை, அதனால் பெரும் பொருளாதார நலன்கள் (எந்த ஆதாரமும் இல்லை) என்று கூறி, அவை பால் சுரக்கின்ற வயதைக் கடந்த பின்னரும் கூட, அவற்றைப் பேணுவதென்பது சமூகத்தின் ஏழை மக்களுக்குத் தரமான இறைச்சி கிடைக்காமலும், மாட்டிறைச்சி விற்பனையால் ஏற்படும் பொருளாதார நன்மைகளையும் தடுக்கின்றன. ஆனால் "புவி வெப்பமடைதல்" என்னும் சூழலுள்ள இந்தக் காலகட்டத்தில் கால்நடைக ளைத் தொடர்ந்து பராமரிப்பதென்பது அதிகச் செலவை ஏற்படுத்துகின்றது. நாம் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சினைகளையும் வைத்து ஒரு அறிவார்ந்த முடிவை எடுக்க வேண்டிய நேரம் இது!. ●

***வினா:*** *அய்யா, தொழிற்சங்கங்கள் பற்றி தங்கள் கருத்து என்ன? தொழிற்சங்கங்கள் எப்படி செயல்பட வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?*

***விடை:*** *என்னுடைய அனுபவத்தை உங்களுக்குச் சொல்கிறேன். இந்தத் தொழிலாளர் இயக்கங்கள் நாட்டில் ஏற்பட்ட பிறகு தான் தொழிலாளர்களின் ஒழுக்கமே கெட்டுப் போய் விட்டது. அவர்கள் ஒழுக்கம் மட்டும் அல்லாமல் முதலாளிகளின் ஒழுக்கமும் கெட்டு, அதனால் மக்களுக்குப் பெருந்தொல்லையும் ஏற்பட்டு விட்டது. அப்படியானால் தொழிற்சங்கமே கூடாது என்பதல்ல இன்று தொழிலாளர் இயக்கங்கள் தொழிலாளர்கள் கையில் இல்லை. தொழிலாளர்களாக இல்லாதவர்கள் கையில் - அதாவது அதைக் கொண்டு வயிறு வளர்ப்பவர்கள் கையில்தான் உள்ளது. தொழிலாளர் சங்கம் ஏற்பட்ட நாள் தொட்டு அரசியல் கட்சிக்காரர் ஒவ்வொரு தொழிற்சங்கம் என வைத்துப் பதவியில் பலன் பெற்று பொறுக்கித் தின்கின்றார்கள்*

*எனது 50 ஆண்டு அனுபவத்தின் பயனாகக் கூறுகின்றேன். அந்தக் காலத்தில் காங்கிரசுக்காரர்களே (பார்ப்பனர்கள்) தொழிலாளர்களைப் பயன்படுத்திப் பிழைக்கவும், பெருமையடையவும் தொழிலாளர்களை வேட்டையாட ஆரம்பித்தார்கள். இந்த நிலை அன்னிபெசண்ட் காலத்தில் தான் முதன் முதல் ஏற்பட்டது எனலாம். மற்றும் வாடியாவுக்கு (நயனை) என்று ஒரு தொழிற் சங்கம், திரு. வி. கவுக்கு என்று ஒரு தொழிற்சங்கம்; பிறகு ரங்கசாமி அய்யங்காருக்கு ஒன்று சத்திய மூர்த்திக்கு ஒன்று, வரதராஜீலு (நாயுடு)வுக்கு ஒன்று என இப்படியாக ஏற்பட்டு விட்டது. இன்று தொழிற்சங்கம் என்றாலே, முதலாளிகளுடன் சண்டை பிடிக்கக்கூடிய ஸ்தாபனம் என்றுதான் இயங்கிக்கொண்டு வருகின்றது. இதனால் உற்பத்தி குறைகின்றது. இந்தத் தகராறு முதலாளி-தொழிலாளி இருவர்களோடு மட்டும் போகாமல் பொது மக்களுக்குப் பாதகமாகவும் முடிகின்றது*

*நல்ல தொழிற்சங்கம் என்ற ஒன்று இருக்க வேண்டுமென்றால், அது முதலாளி இடத்தில் விசுவாசம் - சொந்தப் பொறுப்புப் போலக் கருதித் தொழில் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவது, முதலியவற்றைக் கொள்கைகளாகக் கொண்டிருக்க வேண்டும்.*

*அது போலவே, சிறந்த முதலாளிகள் என்பவர்களும் தொழிலாளர்களைத் தங்கள் சொந்தப் பிள்ளைகள் போல் பாவித்து அவர்கள் நன்மையில் மேம்பாட்டில் நாட்டம் செலுத்த வேண்டும்.*

*என் கருத்து என்னவென்றால் தொழிலாளிக்கு இலாபத்தில் பங்கு கிடைக்க வகை செய்ய வேண்டும் தொழிலாளி தொழிற்சாலையில் பங்குதாரர் போல என்பதேயாகும்.*

***விடுதலை-18-04-1959***




# மதக்கட்டுக்களுக்கு எதிரான விடுதலை வெளி

*இந்து மதம் ஜாதி, தொழில், பாலின அடிப்படையில் பல கட்டுப்பாடுகளை விதிக்கிறது. இவர் இவரைதான் திருமணம் செய்ய வேண்டும் என்பதில் தொடங்கி, சாவு வரை பல வித கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. சடங்குகள், சகுனங்கள் என்பவை அத்தகைய கட்டுப்பாடுகளே.*

**- கன்னல் -**

கடந்த மே 13, 14 ஆகிய நாட்களில் கருந்திணைப் பண்பாட்டுச் செயற்பாட்டாளர்களின் ஒன்று கூடல் கொடைக்கானல், செண்பகனூரில் நடைபெற்றது. ‘கருந்திணைப் பண்பாடு’ அமைப்பின் நோக்கமான பெரியாரின் சுயமரியாதைப் பண்பாட்டினை வாழ்வியல் நடைமுறையாக்குவது என்பதற்குச் சான்றாக இந்த ஒன்று கூடல் நடைபெற்றது.

பெரியாரின் சுயமரியாதைப் பண்பாடு என்பது மூளைக்கு விலங்கிட்டுள்ள மதப்பண்பாட்டிற்கு நேர் எதிரான தனி மனித உளவியல் விடுதலையை உறுதிப்படுத்தும் பண்பாடு. பெரியாரியல் பண்பாடு என்பது சுயமரியாதையை மீட்டெடுக்கும் பண்பாடு. நான் யாருக்கும் தாழ்ந்து இல்லை என்பதும் யாரும் எனக்குத் தாழ்ந்து இல்லை என்பதுமே சுயமரியாதைப் பண்பாடு.

இந்து மதம் இதற்கு நேர்மாறான பண்பாட்டைக் கொண்டுள்ளது. ஜாதி என்பதே எனக்கு எவரும் நிகரில்லை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நிலைப்பது. அதாவது எந்த ஒரு ஜாதியும் மற்றொரு ஜாதிக்கும் இணையானது இல்லை. ஒன்று மேலாக இருக்க வேண்டும். அல்லது கீழாக இருக்க வேண்டும்.

இந்து மதம் பிறப்பின் அடிப்படையில் மனிதரின் இயல்பை, குணங்களை தீர்மானிக்கக் கூடியது. சுயமரியாதை பண்பாடு செயற்பாட்டின் அடிப்படையில் பகுத்தறிந்து முடிவெடுப்பது. அதாவது நபர் சார்ந்ததாக இல்லாமல், செயல் சார்ந்ததாக அணுகுவது. ஒருவர் தவறு செய்தால், அத்தவறை மட்டும் கண்டிப்பது சுயமரியாதைப் பண்பாடு. அந்த மனிதனையே தண்டிப்பது இந்து மதப் பண்பாடு.

இந்து மதம் ஆணுக்கு ஒரு நீதியும் பெண்ணுக்கு ஒரு நீதியும் வரையறுக்கிறது. சுயமரியாதைப் பண்பாடு பாகுபாடற்ற சம நீதியை வலியுறுத்துகிறது.

தோற்றம், செயற்பாடு, பேச்சு என எல்லாவற்றிலும் ஓர் ஆண் எப்படி இருக்க வேண்டும், பெண் எப்படி இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கிறது இந்து மதம். எவரொருவரும் தன் மனதிற்கு விருப்பமான முறையில் தம் வாழ்வை வகுத்துக் கொள்ளலாம் என்பது சுயமரியாதைப் பண்பாடு.

இந்து மதம் ஜாதி, தொழில், பாலின அடிப்படையில் பல கட்டுப்பாடுகளை விதிக்கிறது. இவர் இவரைதான் திருமணம் செய்ய வேண்டும் என்பதில் தொடங்கி, சாவு வரை பல வித கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. சடங்குகள், சகுனங்கள் என்பவை அத்தகைய கட்டுப்பாடுகளே.

எனக்கு நள்ளிரவில் நிலவொளியில் மணம் செய்து கொள்ள விருப்பம் என்றால் இந்து மதம் அதை அனுமதிக்காது. இப்படி என் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளை நான் எப்படி, எந்த நேரத்தில் நடத்த வேண்டும், எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்று கட்டுப்படுத்தும் இந்து மதத்திற்கு மாறானது சுயமரியாதைப் பண்பாடு. மூளைக்குப் போடப்பட்டுள்ள இந்த விலங்குகள் எதுவுமின்றி நாம் நாமாக வாழ வழி செய்வதே சுயமரியாதைப் பண்பாடு.

அந்த அடிப்படையில் முற்றிலும் சுதந்திரமான மனநிலையில் இணைந்து மகிழ்ச்சியாகவும் பயனாகவும் நடந்தேறியது கருந்திணை ஒன்றுகூடல்.

உடை, தோற்றம், பேச்சு, குழந்தைகளின் செயல்பாடுகள் என எவற்றின் அடிப்படையிலும் நம்மை மதிப்பிடுபவர்கள் யாரும் இல்லாத நிலையில் அதைப் பற்றிய சுதந்திர உணர்வுடன் கூடியிருந்தவர்கள் அனைவரும் இயல்பான மனநிலையில் எவ்வித போலித்தனங்களும் இன்றி தாங்கள் தாங்களாகவே இருந்தனர். ஒத்த சிந்தனையுடையவர்களாக இணைந்து நின்று களிப்பும் கலந்துரையாடலுமாக கொண்டாடினர். வெறுமனே கூடி, கொண்டாடி கலையும் நிகழ்வாக அல்லாமல், வாழ்நாள் முழுவதும் சுயமரியாதைப் பண்பாட்டினை நடைமுறைப் படுத்துவதற்குரிய வழிமுறைகளை ஆராயும் நிகழ்வாக நடந்தது.

பொதுவான மதப் பண்பாட்டிலிருந்து விலகி நிற்கும் பெரியாரியல்வாதிகளை இச் சமூகம் எப்படி ஒதுக்குகிறது என்ற கேள்வியின் அடிப்படையில், பெரியாரியல்வாதிகள் ஒன்றிணைந்த ஒரு சமூகமாக இணைந்து,



ஒருவருக்கொருவர் துணை நின்று ஜாதிய சமூகத்தை விட வலுவான ஒரு சமூகமாக எழுந்து நிற்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியது கருந்திணை ஒன்றுகூடல்.

பெரியாரின் சுயமரியாதைப் பண்பாட்டை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள், நம்மையும் அறியாமல் நம் அன்றாட வாழ்வில் மதம் ஊடுருவியிருக்கும் விதம், மூட நம்பிக்கைகளும் சடங்குகளும் பாலின வேற்றுமையும் நம் வாழ்வில் கலந்துள்ள தன்மை, அவற்றை விலக்குவதற்குரிய அறிவியல் பூர்வமான வழிகள் என அனைத்தைப் பற்றியும் கலந்துரையாடல்கள் நடந்தன. தோழர்கள் பூங்குழலி, தேவகி, அ. ப. சிவா ஆகியோர் இவற்றை ஒருங்கிணைத்தனர்.

பெரியாரின் சுயமரியாதைப் பண்பாட்டினை ஏற்றுக் கொண்டவர்கள், உடல் தளர்ந்த தங்களின் இறுதி நாட்களிலும் ஒத்த சிந்தனையுடையவர்களுடன் இணைந்து வாழவும் - இறுதி வரை தம் கொள்கை வாழ்விலிருந்து விலக வேண்டிய தேவையின்றி சுதந்திரமாக வாழவும் - கருந்திணை வாழ்விடத்தை விரைவில் ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை விளக்கி தோழர் தாமரைக்கண்ணன் உரையாற்றியது கூடியிருந்த அனைவருக்கும் நம்பிக்கை ஊட்டியது. கருந்திணை வாழ்விடத்திற்கான கட்டுமானப் பணிகளை இந்த ஆண்டு தொடங்கிவிடுவது என தீர்மானிக்கப்பட்டது.

நம்மைக் கட்டுப்படுத்தி மூளைக்கு விலங்கிடும் மத, ஜாதிய சமூகத்திற்கு மாற்றாக நமக்கென ஒரு அறிவும் ஆற்றலும் அன்பும் மிக்க ஒரு சுயமரியாதைச் சமூகம் உள்ளது என்ற நம்பிக்கையையும் நிறைவையும் அச்சமூகத்தின் அங்கமாக இருப்பதற்காக பெருமிதத்தையும் கூடியிருந்த ஒவ்வொருவர் மனதிலும் விதைத்தது கருந்திணை ஒன்றுகூடல்.

# யாழ்மொழி

*"கல்லூரி நாட்களிலேயே மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் மாணவர் பங்கேற்புத் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு, விண்டோஸ் மொபைல் போன்களுக்கான ஆப்ஸ்களை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டார்.*

திராவிடர் விடுதலைக் கழகத்தின் மதுரை மாவட்டத்தலைவரான முருகேசன் - வாசுகி இணையரின் மகள். இன்று ஒரு பெருமைமிக்க பெரியாரியல் பெண்ணாக தனது ஆற்றலையும் அறிவையும் பெரியாரியலுக்கு முழுமையாக பயன்படுத்திக் கொண்டு நிற்கிறார்.




பனிரெண்டாம் வகுப்புப் பொதுத்தேர்வில் சிறப்பான மதிப்பெண்கள் பெற்று மதுரை மாவட்டத்திலேயே முதல் மாணவியாக தேர்ச்சி பெற்றார். சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் நேரடியாக கணிணித் துறையில் பொறியியல் பட்டம் படிக்கும் வாய்ப்பினை பெற்றவர். ஆனால் எதிர்பாராமல் ஒரு பெரும் விபத்தில் சிக்க நேர்ந்த போதும், மன உறுதியும் போராட்டக் குணமும் மிக்க யாழ்மொழி, அவ்விபத்தின் பாதிப்புகளை சுமந்து கொண்டே தனது பொறியியல் பட்டப்படிப்பில் சிறப்பான முறையில் டிஸ்டிங்சன் பெற்று அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழ் உள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகளின் அளவில் 5-ஆம் இடம் பெற்று தேர்ச்சி பெற்றார். இதைத் தவிர பல்வேறு தொழில்நுட்பப் போட்டிகளில் பங்கேற்று 6 தங்கம், 11 வெள்ளி உட்பட 20 பதக்கங்களைப் பெற்றுள்ளார்.

கல்லூரி நாட்களிலேயே மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் மாணவர் பங்கேற்புத் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு, விண்டோஸ் மொபைல் போன்களுக்கான ஆப்ஸ்களை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டார். பட்டப் படிப்பில் இறுதியாண்டு படிக்கும் போது மைக்ரோசாப்ட் நிறுவனம் நடத்திய போட்டியில் பங்கெடுத்து அவர் தயாரித்த 4 ஆப்ஸ்கள் மைக்ரோசாப்ட் நிறுவனத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒரு புத்தம் புதிய நோக்கியா லூமியா 720 போன் பரிசாக பெற்றார். பட்டப்படிப்பு முடிந்த விடுமுறைக் காலத்தில் அவர் தயாரித்த 2 ஆப்ஸ்கள், மைக்ரோசாப்ட் நிறுவனத்தால் விலைக்கு வாங்கப்பட்டு 100 அமெரிக்க டாலர்கள் அளிக்கப் பட்டன. இதைத்தவிர மைக்ரோசாப்ட்டின் விசுவல் ஸ்டுடியோ வினா-விடை போட்டியில் பங்கேற்று பரிசு பெற்றார்.

இவ்வளவு ஆற்றலும் அறிவும் மிக்க யாழ் மொழி, தனது ஆற்றல் அனைத்தையும் பெரியாரியலுக்கு பயன்படுத்துகிறார் என்பதே பெருமைக்குரிய செய்தியாகும்.

விண்டோஸ் போனில் பயன்படும் வகையில் பெரியாரை குறித்தும் பெரியாரியல் குறித்தும் அனைவரும் அறிந்து கொள்ள எளிமையான 4 ஆப்ஸ்களை அவர் உருவாக்கியுள்ளார். அவற்றை விண்டோஸ் போனில் தரவிறக்கம் செய்யலாம்.

1. Biography of Periyar - பெரியாரின் வாழ்க்கை வரலாறு - ஆங்கிலம்
2. தந்தை பெரியார் - பெரியாரின் வாழ்க்கை வரலாறு - தமிழ்
3. Periyar – The very first feminist of Tamil Nadu பெரியாரின் பெண்ணிய சிந்தனைகள் - ஆங்கிலம்
4. Periyar Thoughts - பெரியார் சிந்தனைகள் - ஆங்கிலம்

அது மட்டுமல்லாது, கடந்த பிப்ரவரி மாதம் திராவிடர் விடுதலைக் கழகம் முன்னெடுத்த அகமண முறை அகற்று பரப்புரைப் பயணத்தில் ஒருவராக முழுமையாகப் பங்கேற்று, பயணத்தின் செய்திகளைத் தொகுத்து பெரியார் முழக்கம் இதழுக்கு அளித்தார். யாழ்மொழியைப் போன்ற பெரியாரியல் பெண்களும், இளைஞர்களுமே இன்றைய காலத்தின் தேவை!

# கம்பராமாயணம், பெரிய புராணம் இவ்விரண்டும் கூட மானமுள்ள, சுயமரியாதை - வீரம் ததும்பிய, இரத்த ஓட்டமுள்ள தமிழ் மக்களால் சுட்டுப் பொசுக்க வேண்டிய புஸ்தகமாகும்

தோழர் பெரியார் - குடி அரசு - 14.06.1931

**"வடமொழிப் புருஷனுக்கு தங்களது தமிழ்த்தாயை கூட்டிவிட்டு பெருமையடைவதன் மூலமே தமிழ்ப் பண்டிதர்கள் இன்று உயிர் வாழ்ந்து ஜீவனம் செய்து வருகின்றார்களா? இல்லையா வென்றும் கேட்கின்றோம்."**

தஞ்சை ஜில்லா நன்நிலத்தில் இம்மாதம் 7-ந் தேதி கூடிய நன்னிலம் தாலூகா மகாநாட்டில் ஹிந்தி பாஷையைக் கண்டனம் செய்து ஒரு தீர்மானம் செய்யப்பட்டிருக்கின்றது. அத்தீர்மானமாவது:-

"பழைய புராணக் கதைகளைச் சொல்லுவதைத் தவிர வேறு அறிவு வளர்ச்சிக்கும் மற்ற பொது விஷயங்களுக்கும் உதவாத சமஸ்கிருதம், ஹிந்தி முதலிய பாஷைகளைத் தேசீயத்தின் பேரால் அரசியல் காரணங்களுக்காகவென்று படிக்கச் செய்வதானது பார்ப்பனீயத்திற்கு மறைமுகமாக ஆக்கம் தேடுவதாகுமென்று இம்மகாநாடு கருதுவதோடு, தற்கால விஞ்ஞான அறிவை நமது மக்களிடம் பரப்பவும், நவீனத்தொழில் முறைகளை நமது நாட்டில் ஏற்படுத்தவும், மற்ற தேசங்களில் எழும்பியிருக்கும் சீர்திருத்த முற்போக்கு உணர்ச்சிகளை நமது மக்களிடம் தோற்றுவிக்கவும், உலக பாஷையாக வழங்கிவரும் இங்கிலீஷ் பாஷையையே நமது வாலிபர்கள் கற்க வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது" என்ற தீர்மானமாகும். இதைபற்றி நாம் 1926 ம் வருஷத்திலேயே "குடி அரசு" பத்திரிகையில் "தமிழுக்குத் துரோகமும், ஹிந்தியின் இரகசியமும்" என்பதாக ஒரு வியாசம் எழுதி இருக்கின்றோம். அது மாத்திரமல்லாமல் "இந்து மதப் புராண இதிகாசங்களை உண்மையாய் உணரவேண்டுமானால் - துளசிதாஸ் இராமாயணத்தை நன்றாய் அறிய வேண்டுமானால் ஹிந்தி படிக்கவேண்டும்" என்று சென்னை திருவாளர் கே. பாஷ்யம் அய்யங்கார் என்ற "ஒரு தேச பக்தர்" சென்ற வாரத்தில் கூட பேசியிருக்கின்றார். இதிலிருந்தும் ஒருவாறு ஹிந்தியின் இரகசியம் அறியலாம்.

அன்றியும் ஹிந்தி பாஷையைப் பொது பாஷையாக ஆக்குவது முடியாத காரியமென்றும், அது கூடாத காரியமென்றும் பார்ப்பனீயப் புராணக் கதைகளை பரப்பத்தான் முடியுமென்றும் வங்காளம் மாடர்ன் ரிவ்யூ பத்திராதிபரான பாபு ராமாநந்த சட்டர்ஜி அவர்கள் தமது பத்திரிகையில் எழுதி இருக்கிறார்கள்.

இதிலிருந்தும் ஒருவாறு ஹிந்தியானது பார்ப்பனப் பிரசாரபாஷை என்றும், அரசியலுக்கு அது சாத்தியப்படாத பாஷை என்றும் விளங்கும்.

இந்நாட்டில் பார்ப்பனீயம் தாண்டவமாடத் தொடங்கிய காலம் முதல் ஏதாவது ஒரு வகையில் புராணங்களையும், பார்ப்பனீயங்களையும், பரப்பும் நோக்கத்துடனேயே எல்லாப் பாஷைகளும் ஆதிக்கம்பெற்று வந்திருக்கின்றன. உலக வழக்கில் ஒரு சின்னக்காசுக்கும் பயன்படாத சமஸ்கிருத பாஷைக்கு இன்றைய தினம் இந்நாட்டில் இருக்கும் ஆதிக்கமும், அதற்கெனவே பல ஏற்பாடும், செலவும், மெனக்கேடும் பார்ப்பனீயத்தைப் பரப்பவே செய்யப்பட்டு வருகின்றன. சமஸ்கிருத காலேஜ், சமஸ்கிருதப் பாடசாலை, மற்றும் சமஸ்கிருத வளர்ச்சிக்கு ஏற்ற முயற்சிகள் முழுவதும் சமஸ்கிருதம் வாழ்க்கைக்கு சிறிது பாகமும் வேண்டிய அவசியமில்லாத மக்களின் செலவிலேயே நடைபெற்று

வருகின்றன. இது இந்த நாட்டு மக்களின் சுயமரியாதையற்ற தன்மைக்கு ஒரு பெரும் உதாரணமாகும். இதை தட்டிப்பேச இன்றைய சட்டசபை, மந்திரிசபை ஆகியவைகளில் ஒரு சிறு மூச்சுவிடவும் ஆள்கள் இல்லை. போதாக்குறைக்கு இன்று ஹிந்தி பாஷை ஒன்று புதிதாக முளைத்து இந்தியமக்கள் மீது ஆதிக்கம் செலுத்த முயற்சிகள் வெகு பலமாய் செய்யப்பட்டு வருகின்றது. இது இந்நாட்டு மக்களுக்கு பாஷை விஷயத்திலும் சுயமரியாதை இல்லையென்பதற்கு ஒரு உதாரணமாகும்.

தமிழ்நாட்டுக்கு ஹிந்தி என்ன அவசியத்திற்கு என்று கேட்க ஒரு தேசபக்தராவது இன்று தேசீய வாழ்வில் இல்லை. தேச பக்த குழாம் பெரிதும் கூலிக்கு மாரடிப்பவர்களாலேயே நிரப்பப்பட்டுவிட்டதால் பார்ப்பனத் தலைவர்களுக்கும் பார்ப்பனர்களால் பிடித்து வைக்கப்பட்ட தலைவர்களுக்கும் அடிமைகளாய் இருந்து அவர்கள் உபதேசித்த தேசீய மந்திரத்தை உருப்போட்டு ஜெபித்து வயிறு வளர்ப்பதைவிட வேறு யோக்கியதை இல்லாமல் போய்விட்டது.

இந்த நாட்டில் இன்றைய தமிழ் பாஷையே தமிழ் மக்களின் சுயமரியாதைக்கும், மனிதத் தன்மைக்கும், சுதந்திரத்திற்கும் நேர் விரோதமாக விருக்கின்றது என்பதைப் பல தடவை சொல்லி வந்திருக்கின்றோம். இன்றைய தமிழ் பாஷையில் பெரிய இலக்கியமாய் பாவிக்கப்படுவதாகிய கம்பராமாயணம் பெரிய புராணம் ஆகிய இவ்விரண்டும் கூட மானமுள்ள, சுயமரியாதை - வீரம் ததும்பிய, இரத்த ஓட்டமுள்ள தமிழ் மக்களால் சுட்டுப் பொசுக்க வேண்டிய புஸ்தகமாகும். தமிழ் மக்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்றவர்களுக்கு போதிய மான உணர்ச்சி இல்லாததாலேயே அவற்றிற்கு தமிழ் நாட்டில் இன்னமும் இடமிருக்க வேண்டியதாகி விட்டது. இன்றைய தினம் தமிழ் படித்து தமிழ் பாஷையில் பற்றுகொண்டு தமிழைத் தாய் பாஷையாய்க் கொண்ட ஒருவனாவது தன்னுடைய தமிழ்த்தாய் வடமொழிப் புருஷனுடன் சோரத்தனம் செய்து கொண்டிருக்கின்றாளா? இல்லையாவென்றும் பிள்ளைகளையெல்லாம் கூட வடமொழிப் புருஷனுக்கு உதவும் படியாகவே அவனைப் போலவே பெற்றுக்கொண்டுமிருக்கின்றாளா? இல்லையாவென்றும், அப்படிச் சோரத்தனம் செய்ததில் முதல்தரப் பிள்ளைகளாயும் சிரஞ்சீவி பிள்ளைகளாயும் இந்தக் கம்பராமாயணமும் பெரிய புராணமும் இருக்கின்றதா இல்லையா? என்றும் கேட்பதோடு இந்த வடமொழிப் புருஷனுக்கு தங்களது தமிழ்த்தாயை கூட்டிவிட்டு பெருமையடைவதன் மூலமே தமிழ் பண்டிதர்கள் இன்று

> **“ உலக வழக்கில் ஒரு சின்னக்காசுக்கும் பயன்படாத சமஸ்கிருத பாஷைக்கு இன்றைய தினம் இந்நாட்டில் இருக்கும் ஆதிக்கமும், அதற்கெனவே பல ஏற்பாடும், செலவும், மெனக்கேடும் பார்ப்பனீயத்தைப் பரப்பவே செய்யப்பட்டு வருகின்றன. ”**

உயிர் வாழ்ந்து ஜீவனம் செய்து வருகின்றார்களா? இல்லையா வென்றும் கேட்கின்றோம்.

தமிழ்த்தாய் தானாகவே சமஸ்கிருதப் புருஷன் மீது ஆசைப்பட்டு “விபசாரம்” செய்வதில் நமக்கு ஆக்ஷேபணை இல்லை. ஆனால் இந்தப் பண்டிதர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு, தங்கள் சுயநலப் பெருமைக்கு தமிழ்த்தாயை கூட்டி விட்டுப் பிழைப்பதைத்தான் நாம் வெறுக்கின்றோம். அப்படிக் கூட்டிவிடுவதாவது தமிழ்த்தாயின் மக்கள் சமூகத்திற்காவது அவர்களது சுயமரியாதைக்காவது ஆபத்தில்லாமல் இருக்குமானால் நமக்கு ஆக்ஷேபணையில்லை. அப்படிக்கின்றி இன்று நாட்டைப் பாழாக்கி விட்டது இந்த சமஸ்கிருதப் புருஷனிடம் தமிழ்த்தாயை சம்பந்தப்படுத்தியதே என்று தெரிந்து இருந்தும், மறுபடி இதையே ஆதரித்தால் இதற்கு எதை ஒப்பிடுவது என்பது நமக்கு விளங்கவில்லை. இது இப்படியிருக்க இப்பொழுது மற்றொரு புருஷனை (ஹிந்திப்பாஷையை) தமிழ்த்தாயிக்கு நமது தேச பக்தர்கள் கண்டு பிடித்து இருப்பது மிகவும் ஆச்சரியமாகவே இருக்கின்றது. இனி தமிழ்த்தாயிக்கு தகுந்த புருஷன் வேண்டுமானால் மானத்துடனும் வீரத்துடனும் அறிவுடனும் பிள்ளைகளைப் பெற்று அவைகளை வைத்துக் காப்பாற்றும் புருஷன்தான் இருக்கவேண்டும். அதுவும் தகுந்தபடியான சுதந்திர காதல் மணமாகத்தான் செய்விக்க வேண்டுமேயொழிய இனியும் இம்மாதிரி வயிற்றுப் பிழைப்பை மாத்திரம் கருதிய சம்மந்தமாகவும், அதுவும் தமிழ்த்தாயிக்கு அல்லாமல் மற்றவர்களுடைய சுயநலத்திற்காகவும் இருக்கும் அடிமை மணமாகவும் இருக்கக்கூடாது என்றே சொல்லுவோம்.

தமிழ்த்தாயிக்கு யோக்கியதை இருந்து அவள் தகுந்த மானமுள்ள மக்களைப் பெற்று

**நீ வீதியில் நடக்க வேண்டாம். அருகில் வரவேண்டாம், கண்களில் தென்பட வேண்டாம், படிக்க வேண்டாம் "சர்வ தயாபரனும் சர்வ கருணாமூர்த்தியும் சர்வ சக்தனும்" ஆகிய "கடவுளிடம்" கூட பக்கத்தில் நெருங்க வேண்டாம்"**

இருந்தால் நாட்டு நலனுக்கு ஏற்ற சகல விஷயத்தையும் தமிழிலேயே ஆக்கியிருக்க வேண்டும். நாட்டிற்கு தமிழே போதுமான தாயிருக்க வேண்டும். அப்படி இல்லையானால் தமிழ்த்தாயின் தகுதிக்கும் அவசியத்திற்கும் ஏற்றது எதுவோ அதைக் கொள்ளவேண்டும். இன்றையத் தினம் நாட்டிற்கு கவியழகு, கற்பனையழகு, புராண அழகு, மோட்ச அழகு, பகவான் வாக்கு அழகு, அவதாரப் பெருமை அழகு அல்ல வேண்டியிருப்பது. இவை சோம்பேறிகளுக்கும் மக்கள் கஷ்டத்தை உணராதவன் நெஞ்சகர்களுக்கும் ஊரான் உழைப்பில் வயிறு வளர்க்கும் அயோக்கியர்களுக்கும் அவசியம் உணரமுடியாத அறிவிலிகளுக்குமே இவை வேண்டியதாகும். மற்றபடி மானமுள்ள மக்களுக்கு - பக்ஷாதாப முள்ள மக்களுக்கு - யோக்கியர்களுக்கு அறிவாளிகளுக்கு இந்தியாவின் 35 கோடி மக்கள் சமத்துவ உணர்ச்சியுடன் இருக்கவும் வயிற்றுப் பிழைப்புக்கு மானத்தை விற்காமல் வாழவும், பணக்காரன், படித்தவன், மேல்ஜாதிக்காரன் என்கின்ற வஞ்சகர்களால் மிதிபட்டு நசுக்கப்படாமல் இருப்பதற்கும் குழந்தைகளுக்கு பூச்சாண்டியையும், காக்கையையும் பிராக்கு காட்டி கையில் இருப்பதை தட்டிப் பிடிங்கிக்கொள்வது போல் மோட்சத்தையும், காவியத்தையும், கவியழகையும், கடவுளையும், கலைகளையும் காட்டித் தட்டிப் பிடுங்கிக் கொள்ளாமல் அவரவர்கள் பாடுபட்டது அவரவர்களுக்காவது உதவவும், "நீ வீதியில் நடக்க வேண்டாம். அருகில் வரவேண்டாம், கண்களில் தென்பட வேண்டாம், படிக்க வேண்டாம் "சர்வ தயாபரனும் சர்வ கருணாமூர்த்தியும் சர்வ சக்தனும்" ஆகிய "கடவுளிடம்" கூட பக்கத்தில் நெருங்க வேண்டாம்" என்கின்ற அயோக்கியத்தனம் நீங்கவும் வேண்டியது முக்கியமாய் இருக்கின்றபடியால் அதற்கு எந்த பாஷை வேண்டும்? எந்த பாஷைப் படித்தால் இந்த மாதிரியான அற்பபுத்தி நீங்கும்? என்பதுதான் நமது கேள்வி. ஆகவே இன்றைய இந்தத் தேவைக்கு - இன்று இந்த நாட்டிற்கு ஹிந்தி வேண்டுமா? இங்கிலீஷ் வேண்டுமா? என்பதை மானத்துடன் உள்ளவர்கள் நடு நிலைமையிலிருந்து யோசித்துப் பார்த்து சொல்லட்டும் என்றே வேண்டுகின்றோம். ஹிந்தி பாஷையை படிக்க வேண்டும் என்கின்ற நிர்பந்தத்தை காங்கிரசில் கொண்டு வந்து புகுத்தியதே வருணாச்சிரமத்தை நிலை நிறுத்தவும் அதைக் கட்டாயப்படுத்தி மக்களுக் குள் புகுத்தவுமே செய்த சூக்ஷியான காரியமாகும். இந்த அயோக்கியத் தனத்திற்கு திரு. காந்தி அவர்கள் கண்டிப்பாய் உளவாளி என்றே சொல்லுவோம். இதனால் வாய் வெந்து போவதானாலும் சரி. தலையில் இடி விழுவதானாலும் சரி, முன் காலத்து ரிஷிகளும், முனிவர்களும் நமக்கு எவ்வளவு கொடுமையை விளைவித்தவர்கள் என்பதாக இப்போதைய மானமுள்ள மக்கள் எப்படிக் கருதுகின்றார்களோ அதற்கு ஒரு முந்திரி கூட குறைவல்ல இன்றைய மகாத்மாக்களால் நமக்கு வரும் ஆபத்தும் இழிவும் என்பதில் எமக்குச் சிறிதும் சந்தேகமில்லை. யாருக்காவது சந்தேகம் இருந்தால் சென்ற வாரம் திரு. காந்தியவர் கள் யங்இந்தியாவில் "வர்ணாச்சிரம தர்மம்" என்கின்ற தலைப்பில் எழுதிய தலையங்கத்தையுற்று கவனியுங்கள்.

"வர்ணாச்சிரம தர்மங்களில் குறிப்பிட்ட நான்கு தர்மங்களில் எனக்கு நம்பிக்கையுண்டு. இந்தப்பாகுபாடுகள் பரம்பரைத் தொழில் சம்பந்தமாக ஏற்பட்டது."

"பிராமணன் வித்தை கற்றுக்கொடுக்கவும், க்ஷத்திரியன் சக்தியற்றவர்களைப் பகைவரிடமிருந்து காக்கவும், வைசியன் உழவுத்தொழில் செய்யவும், சூத்திரன் உடலால் உழைத்து வேலை செய்யவும் என்று ஏற்பட்டவைகளாகும்."

"இந்து மதம் இவற்றை ஜனசமூக வாழ்வில் அங்கீகரித்து கிரமமாக நடத்தையிலும் அனுஷ்டித்து வருகின்றது".

"இந்தப்படியான அவரவருக்கு உரிய காரியத்தை அவரவர் செய்யத் தவறியதால்தான் இப்போது வருண தருமம் அழிந்து பல ஜாதிகள் தோன்றின".

"வகுப்பு ஒற்றுமைக்கும் கலப்பு விவாகம், சமபந்திபோஜனத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்பது எனது திடமான அபிப்பிராயம்."

“கலப்பு விவாகங்களால் நாட்டில் வகுப்பு ஒற்றுமை ஏற்பட்டு விடுமென்று நான் நம்பவில்லை.”

“மனிதர் யாவருமே சமம். ஆனால் இந்த சமம் என்பது ஆத்மாவைப் பொறுத்த வரையில் தானேயொழிய சரீரத்தை பொறுத்த வரை சமமல்ல.”

என்ற குறிப்புகளை அதில் எழுதி இருக்கிறார். இந்த மாதிரியான வருண தர்மத்தை நிலை நாட்ட வந்த புருஷனை ‘பிராமணர்கள்’ மகாத்மா என்று கூறுவதிலும், அவரைப் பின் பற்றுவதிலும், அவர் சொல்லுகிறபடி யெல்லாம் ஹிந்தி படிப்பதிலும், கீதை படிப்பதிலும், ராமராஜ்ஜியம் ஸ்தாபிப்பதற்காக கள்ளுக்கடை, ஜவுளிக்கடை மறியல் செய்வதிலும் யாதொரு அதிசயமும் கொள்ளஇடமில்லை. ஆனால் “நாங்களும் சுயமரியாதைக்காரர்கள்தான்” தமிழ்மக்கள் இந்த மாதிரியான வருணாச்சிரமத்திற்குக் கட்டுப் பட்டவர்கள் அல்ல............” என்று சொல்லுகின்ற மக்கள் இந்த மகாத்மாவையும், அவர்களை மகாத்மாவாக்கின பார்ப்பனர்களின் வால்களையும் பிடித்துத் தொங்கிக் கொண்டு திரிவதில்தான் நமக்கு அதிசயம் காணப்படுகின்றது.

இதைப் பார்க்கின்றபோது “பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்” என்று சொன்ன வார்த்தை மிகவும் பொருத்தமும், அருத்தமும் கொண்ட வார்த்தை என்றே தோன்றுகின்றது. ●

***வினா:*** *அய்யா, தாங்கள் இரஷ்யா சென்றபோது தான் கம்யூனிசத்தைப் பற்றித் தெரிந்து கொண்டதாகச் சொல்லப்படுவது உண்மையா?*

***விடை:*** *நான் 1927-ல் திருநெல்வேலி மாநாட்டில் கம்யூனிசத்தைப் பற்றி பேசினேன். பிறகு பொதுக்கூட்டங்களில் கம்யூனிசப் பிரச்சாரம் பலமாக செய்து வந்தேன். ரயில், தபால், தந்தி முதலிய இலாக்காக்கள் சர்க்காரால் நடத்துப்படுவது கம்யூனிசத்துக்கு ஒரு உதாரணம் என்றாலும் அதுபோல மக்களுக்குத் துணி தைத்துக் கொடுத்தல், சவரம் செய்தால் போன்ற மக்களுக்குத் தேவையான எல்லாக் காரியங்களும் சர்க்காரால் நடத்தப்படவேண்டும் என்றும் 1927-லேயே பேசி இருக்கிறேன்.*

*இது நான் ரஷ்யாவைப் பார்த்துப் பேசியதல்ல பார்ப்பானுக்கும், கடவுளுக்கும், காங்கிரசுக்கும், காந்திக்கும் விரோதமாகப் பிரச்சாரம் செய்து வந்ததில் தோன்றிய கருத்துக்களே இவை.*

***உண்மை, (14-07-1972)***

***குறிப்பு:*** *1)தந்தை பெரியார் சோவியத் ருசியாவுக்குப் புறப்பட்டது 13-12-1931*

*2)மார்க்சு-ஏங்கல்சு சமதர்ம அறிக்கையைத் தந்தை பெரியார் அச்சிட்டு வெளியிட்டது 04-10-1931*

*3)லெனினும் மதமும் என்ற நூலை பெரியார் வெளியிட்டது.11-12-1931*


***வினா:*** *அய்யா, திராவிடர் கழகத்தார் தொழிலாளிகளை சரிவரக் கவனிப்பதில்லை என்று சொல்லப்படும் குற்றச்சாட்டுக்கு தாங்களின் விளக்கம் என்ன?*

***விடை:*** *இது தொழிலாளர்களின் தெரியாத்தனமேயாகும். தொழிலாளிகளும் தொழிலாளர் இயக்கங்களும் பெருவாரியும் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், புராண பிரசிங்கிஸ்ட் ஆகிய ஸ்தாபனங்களோடு தான் அதிக சம்பந்தம் வைத்துக் கொண்டு அவர்களை ஆதரித்து வருகிறார்களே தவிர, திராவிடர் கழகத்தினரிடம் தொழிலாளர்களுக்குப் பற்றில்லை. இது எனது 20 - 25 வருச அனுபவம் என்றாலும், நான், தொழிலாளர்கள் நம்மை ஆதரிக்கவில்லையே என்று ஒரு காலத்திலும் கவலைப்பட்டதில்லை. அதற்காக அவர்களைப் பிடிக்க நான் வலை வைத்ததுமில்லை. எங்கள் தொண்டு யாவும் தொழிலாளர்களுக்காவேதான், நாங்களும் தொழிலாளிகள் தாம். ஆகவே வாய்ப்பினால் மாத்திரம் தொழிலாளிகளில்லாமல், பிறவியினால், சட்டத்தினால், சாஸ்திரங்களால் கடவுள்களால், கடவுள் சிருஷ்டியினால் நாங்கள் தொழிலாளிகளாக ஆக்கப்பட்டவர்கள். அப்படிப்பட்ட தொழிலாளிகள் தாம் திராவிடர்கள். ஆகவே, சரீரத்தினால் பாடுபடும் வேலை அவ்வளவும் சூத்திரர்கள் என்று அழைக்கப்படும் - ஆக்கப்பட்டிருக்கும் திராவிடர்களாகிய நம் கையிலேயே இருப்பதால் திராவிடர் இயக்கம் தொழிலாளர் இயக்கம் என்று சொல்கிறேன்.*

***விடுதலை 01-07-1946***

# பசுவும் – பார்ப்பனரும்: அன்றும் இன்றும்

– மே.கா.கிட்டு



மீண்டும்
பசுப் பாதுகாப்புச்
சட்டத்தைக்
கொண்டுவர
நினைக்கிறார்கள். மனிதர்களை
நினைக்கிறார்களோ
இல்லையோ
மாட்டை வைத்து
அரசியல்
செய்துகொண்டிருக்கிறார்கள்.



பா.ஜ.க இந்துத்துவா (இந்துராஷ்டிரம்) என்பதிலும் பசுப் பாதுகாப்பிலும் நம்பிக்கை வைத்துள்ள ஒரு அரசியல்கட்சி.

ஆர்.எஸ்.எஸ் அமைப்பு என்ன சொல்கிறதோ அதைநிறைவேற்ற அரசியல் கட்சியாக உருவெடுத்தது தான் பா.ஜ.க. ஆர்.எஸ். எஸ். காரணம் - பி.ஜே.பிகாரியம்; செயல்படுத்தும் சக்தி - ஆர்.எஸ்.எஸ்; செயல்படும் கட்சி - பி.ஜே. பி.; தற்போது மீண்டும் பசுப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டுவர நினைக்கிறார்கள். மனிதர்களை நினைக்கிறார் களோ இல்லையோ மாட்டை வைத்து அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள்.

யோகி ஆதித்யாநாத் என்றபா.ஜ.க நாடாளுமன்றஉறுப்பினர் சூன் 25, 2014 அன்று நாடாளுமன்றத்தில் ஒருதனிநபர் மசோதாவை தாக்கல் செய்துள்ளார். நாடுமுழுவதும் பசுவையும் அதன்கன்றுக்குட்டியையும் வெட்டுவ தைத் தடைசெய்யக் கோருகிறது இந்த மசோதா. இந்த மசோதா பசு மட்டுமல்ல, காளை, எருது களுக்கும் கன்றுகுட்டிகளுக்கும் ‘பசு’ என்ற சொல்பொருந்தும் என்று வரையறுக்கும் மசோதா, ஒட்டு மொத்தமாக மாடுகளை வெட்டு வதற்கே தடைபோடவேண்டும் என்று வலியுறுத்துகிறது.

இவர்கள் இப்பொழுதுமட்டுமல்ல ‘பாரதிய ஜன சங்கம்’ என்ற பெயரில் 1951 -ல் அது உருவான காலத்திலிருந்தே இதே போல் குரல் கொடுத்து வருகின்றனர். 1952 தேர்தலில் ஜனசங்கம் நேரு மீது சுமத்திய மிகப் பெரிய குற்றச்சாட்டு என்னவென்றால் “அவர் மாட்டுக் கறி சாப்பிடுகிறார்” என்பதாகும். பசுவதைத் தடைக்கு அவர் தடையாக இருக்கிறார் என்ற காரணத்திற் காகவே இப்படிப் பிரச்சாரம் செய்தார்கள்.

1955 -ல் டாக்டர்சம்பூர்ணானந்த் என்கிற முன்னாள் இந்துமகாசபைக்காரர் உத்திரப்பிரதேசத்தின் முதல்வராக இருந்தபோது பசுவதைத் தடைச்சட்டத்தைகொண்டு

வந்தபோது பிரதமர் நேரு "இது ஒரு தவறான நடவடிக்கை" என்றார். மத்திய பிரதேசத்தின் முதலமைச்சராக கைலாஷ்நாத்கட்சு என்ற காங்கிரஸ்காரர் இருந்தார். 1962 தேர்தலின் போது அங்கே ஜனசங்கம் வைத்த முழக்கம் "ஜனநாயகத்திற்கு போடும் ஓட்டு பசுவைக் காக்கும் ஓட்டு". தேர்தல் பிரச்சாரத்தின் போது அவர்கள் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தின் அட்டையில் பசுவைக் கொல்ல நேரு வெட்டரிவாளோடு நிற்பதாகப் படம் போடப்பட்டிருந்தது.

இதில் லட்சுமிநாராயணன்பாண்டே என்ற ஆர். எஸ். எஸ்.காரர் வெற்றி பெற்றார். எனவே அடுத்த தேர்தலுக்கும் மாட்டையே நம்ப முடிவுசெய்தனர். தலைநகர் டில்லியை தலைமையகமாகக் கொண்டு 'பாரத் கோசேவக் சமாஜ்' என்கிற அமைப்பை உருவாக்கினார்கள்.

இதன் புரவலர்களில் முக்கியமானவர் பெருமுதலாளி ஜெய் தயாள் டால்மியா. இந்த அமைப்பின் சார்பில் 1964 ஆகஸ்டில் மாநாடு ஒன்றைக் கூட்டினார்கள். அதன் நோக்கம் பசுவதைத் தடைச் சட்டம் கோருவது. மாநாட்டைத் துவக்கி வைத்தவர் ஆர். எஸ். எஸ் தலைவர் குருஜி கோல்வாக்கர். அங்கே முக்கிய உரை நிகழ்த்தியவர் ஜனசங்கத்தின் தலைவர் தீன தயாள் உபாத்யாயா.

1967 பொதுத்தேர்தல் வர இருந்த சூழலில் 1966 ஆகஸ்டில் நாடாளுமன்றத்தில் ஜனசங்கம் எம். பி. க்கள் பசுவதைத் தடைச்சட்டம் கொண்டு வரும்படி மத்திய அரசை வற்புறுத்தினார்கள். மத்திய வேளாண் அமைச்சர் இதற்கு இணங்கவில்லை. அப்போது மத்திய உள்துறை அமைச்சராக இருந்தவர் இந்துத்துவ ஆதரவாளரான ஜி. நந்தா நடாளுமன்றத்தில் சுவாமி ராமேஷ்வரானந்த் என்கிற ஜனசங்க எம். பி "கோமாதாவுக்குஜே" என்றுவிடாமல் முழக்கம் கொடுக்கவும் அவரைச் சபாநாயகர் பத்துநாட்களுக்கு சபையிலிருந்து விலக்கிவைத்தார்.

சபைக்கு வெளியே ஆர். எஸ். எஸ் பரிவாரத்தின் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பூரி சங்கராச்சாரியார் உள்ளிட்ட சில சாமியார்கள் நவம்பர் 20 முதல் காலவரையற்ற உண்ணாவிரதம் இருப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டது. இந்தஇயக்கத்திற்காக 'சர்வதாலியகோரக் மகாஅபியான் சமிதி' என்கிற இன்னும் விரிந்தகுழு அமைக்கப்பட்டது. இந்தக்குழுவிற்கு தனது முழுஆதரவைத் தெரிவித்துத் தீர்மானம் போட்டது நவம்பர் 3ல் கூடிய ஜனசங்கத்தின் நிர்வாகக்குழு.


**"தேர்தல் பிரச்சாரத்தின் போது ஆர். எஸ். எஸ் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தின் அட்டையில் பசுவைக் கொல்ல நேரு வெட்டரிவாளோடு நிற்பதாகப் படம் போடப்பட்டிருந்தது."**

1966 நவம்பர் 7 அன்று டில்லியில் மாபெரும் பேரணி நடத்தப்பட்டது. பேரணியின் முடிவில் மக்களவை முன்பாகப் பொதுக்கூட்டம். அதில் குருஜி கோல்வாக்கர், சேத்கோவிந்ததாஸ், வாஜ்பாய், சுவாமி ராமேஷ்வரானந்த் ஆகியோர் பேசினார்கள். பத்துநாள்சஸ்பெண்ட் செய்யப்பட்டிருந்த சுவாமி ராமேஷ்வரானந்த் அது முடிந்து மீண்டும் மக்களவைக்குச்சென்று மீண்டும் அங்கே கலகம்செய்ததால் அந்தக் கூட்டத்தொடர் முழுதும் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

அதே வேகத்தோடு இங்கு வந்து கூட்டத்தில் இருப்போரின் உணர்ச்சிகளை உசுப்பிவிட்டு கலவரத்தில் இறங்கும்படி அறைகூவல் விடுத்தார். அவர்கள் பெரும் கலவரத்தில் இறங்கினார்கள். பக்கத்திலுள்ள அரசு கட்டிடங்களைத் தாக்கினார்கள். தீவைத்தார்கள். இதன் காரணமாய் ஒரு போலீஸ்காரர் உள்ளிட்ட 8 பேர் இறந்தார்கள். ஆர்ப்பாட்டத்தின் உச்சகட்டம் எதுவென்றால் தனது வீட்டிற்குள் காங்கிரஸ் தலைவர் காமராசர் சிக்கிக் கொண்டதும் அவரது தனி உதவியாளர் காயம்பட்டதும் ஆகும். இதனை கிரெய்க்பாக்ஸ்டெர் என்பவர் எழுதிய 'ஜனசங்' என்கிற நூல் கூறுகிறது. அப்பொழுது அகில இந்தியகாங்கிரஸ் தலைவராக காமராசர் இருந்தார். அவர் பசுவதைத் தடைச்சட்டத்திற்கு எதிரானவர் என்பதால் திட்டமிட்டே அவரைத் தாக்க முயற்சி செய்தார்கள்.

அதற்குள் அறிவித்தபடி நவம்பர் 20 அன்று பூரி சங்கராச்சாரியாரும் பிரபுதத் பிரம்மச்சாரி என்பவரும் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டாலும் விரைவில் விடுதலை ஆனார்கள். பிறகும் அவர்கள் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தார்கள். ஆர். எஸ். எஸ்ஸின் வன்முறை வெறியாட்டத்தை

**ஆர். எஸ். எஸ்ஸின் வன்முறை வெறியாட்டத்தை ஒடுக்கத் தவறிய உள்துறை அமைச்சர் நந்தாவை பிரதமர் இந்திராகாந்தி டிஸ்மிஸ் செய்தார். இவர்களின் பசுவதைத் தடைச்சட்டத்திற்கு எதிராக நேருவைப் போலவே இந்திராவும் உறுதியாக இருந்தார்.**



ஒடுக்கத் தவறிய உள்துறை அமைச்சர் நந்தாவை பிரதமர் இந்திராகாந்தி டிஸ்மிஸ் செய்தார். இவர்களின் பசுவதைத் தடைச்சட்டத்திற்கு எதிராக நேருவைப் போலவே இந்திராவும் உறுதியாக இருந்தார்.

பிறகு அவசரநிலை ஆட்சியின் போது விநோபாபாவே பசுவதைத்தடை கோரி சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்தார். ஜெயப்பிரகாஷ் நாராயணும் இதை ஆதரித்தார். பிறகு 1979 ல் மீண்டும் சாகும்வரை உண்ணாவிரதம் என்றார். அப்பொழுதிருந்த பிரதமர் மொரார்ஜி தேசாய் பசுவதைத்தடைச் சட்டத்தை மத்திய அரசே கொண்டுவரும் வகையில் பொதுப்பட்டியலில் கொண்டு வருவதற்கான அரசியல்சாசனதிருத்த மசோதாவைப் படுவேகமாகக் கொண்டு வந்துவிட்டார். மக்களவையில் அந்த மசோதா நிறைவேறியும் விட்டது. நல்லவேளையாக அதற்குள் மொரார்ஜி அரசு கவிழ்ந்து போனதால் அன்றுசட்டம் ஆவதற்கான இதர நடைமுறைகள் தொடராமல் போயின. பிறகு பாரதிய ஜனதாக்கட்சி தலைவர் வாஜ்பாய் தலைமையிலான தேசியஜனநாயகமுன்னணி ஆட்சிக்கு வந்து பசுவதைத்தடைச்சட்டத்தைக் கொண்டுவந்தது. மதச்சார்பற்றக் கட்சிகளும், கம்யூனிஸ்டுகளும் எச்சரிக்கையாய் இருந்த காரணத்தினால் நடைமுறைப்படுத்த முடியவில்லை.

இவர்கள் இப்படிச் செய்வதற்கெல்லாம் காரணம் ஆர். எஸ். எஸ்சின் கொள்கை முடிவுதான். பசுவதை பற்றிக் குறிப்பிடும் பொழுது குருஜி கோல்வாக்கர் இந்தத் துணைக்கண்டத்திற்குள் முஸ்லீம்கள் வந்த பிறகே பசுவதை தொடங்கியதாகவும் அதற்கு திறப்புவிழாச் செய்தவர்கள் அவர்கள்தாம் என்று சர்வ நிச்சயமாகத் தனது 'சிந்தனைக் கொத்து' என்ற நூலில் சொல்கிறார். மற்றொரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது முகமதியர்கள் இதைத் தொடக்கி வைத்தார்கள். பிரிட்டிஷ்காரர்கள் இதைத் தொடர்கிறார்கள் என்றும் சொல்கிறார்.

உண்மையில் இவர்கள் பசுவைப் பாதுகாப்பது என்பது முஸ்லீம் எதிர்ப்பு மட்டுமே. பசுவைப் பாதுகாப்போம் என்ற பெயரில் பார்ப்பன 'புனிதத்தன்மை'யைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில்தான்.

பார்ப்பனர்கள்மாட்டிறைச்சிஉண்டவர்கள் என்று வேதகாலத்திலே பல ஆதாரங்கள் உள்ளன. வேத காலத்தில் பசு புனிதமாக மதிக்கப்பட்டது என்ற வெகு ஜனக்கருத்துக்கு எதிராக, வேள்விகளுக்குக்காகவும், மற்ற தேவைகளுக்காகவும் பசுக்கள் கொல்லப்பட்டிருக்கின்றன. அதற்கு ஆதாரமாக யஜூர் வேதத்தில் பல யாகங்கள் உள்ளன. அதில் பசுக்களைக் கொல்ல நடத்தப் பட்ட யாகங்களில் சில

கோஸவம் - பசு மாடு, காளை மாடு - இவைகளைக் கொல்லும்யாகம்.

வாயவீயஸ்வேதபசு - வாயுதேவதைக்காக வெள்ளைப்பசுவைக் கொல்வது.

காம்யபசு - தனது எண்ணங்களை ஈடேற்றிக் கொள்வதற்குரிய பசுயாகம்.

வத்ஸோபகரணம் - கன்றுக்குட்டியைக் கொலைசெய்து நடத்தும் யாகம்.

அஷ்டதசபசுவிதானம் - பதினெட்டு பசுக்களைக் கொலைசெய்து நடத்தும் யாகம்.

ஏகாதசீனபசுவிதானம் - பதினொன்று பசுக்களைக் கொல்லும் யாகம்.

க்ராமாரண்யபசுப்ரசம்ஸா - நாட்டிலும்

*காட்டிலும் உள்ள பசுக்களைக் கொன்று யாகம் செய்தல்.*

*கவ்யபசுவிதானம் - பசுமாட்டைக் கொன்று நடத்தும்யாகம்.*

*ஆதித்யதேவதாகபசு - சூரியதேவதைக்கு பசுயாகம்.*

*உபாகரணமந்த்ரம் - யாகத்தில் கொல்லப்படும் பசுவைச் சுத்திசெய்யும் மந்திரம்.*

*இவர்கள் உயர்த்திப் பிடிக்கும் மநுதர்மத்தில் கூட மநு வேள்விச் சடங்குகளின் போது இறைச்சி உண்பது தெய்வக்கட்டளை என்றும், வேள்விகளில் பலியிடப்படுவதற்காகவே விலங்குகள் படைக்கப்பட்டுள்ளன; சடங்குகளின் போது நடத்தப்படும் கொலை (வதை) கொலையல்ல (அ வதை); என்றும் வேதத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட இம்சையை அகிம்சையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், வேள்வி சிரார்த்தம் ஆகிய நிகழ்ச்சிகளின்போது தரப்படும் இறைச்சியை உண்ண மறுக்கும் பார்ப்பனன் இருபத்தியாரு முறை விலங்காய்ப் பிறப்பான் என்றும், புலால் உண்பதை மநுதர்மம் நியாயப்படுத்துகிறது. மநுவைப் போலவே யாக்ஞவல்கியரும் உயிருக்கு ஆபத்தான நேரங்களிலும், வேள்விகளின் போதும், மரணச்சடங்குகளின் போதும் இறைச்சி உணவை உண்ண அனுமதிதந்தார்.*

*மௌரியர் காலத்துக்குப் பின்பும், குப்தர் காலத்திலும் இலக்கிய வடிவம் தரப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட மகாபாரதம், இராமாயணம் ஆகியவை மாட்டிறைச்சி உண்ணும் பழக்கத்துக்குத் தெளிவான ஆதாரங்களைத் தந்துள்ளன. தொடக்க கால ஸ்மிருதிகளும், புராணங்களும் இந்த காலகட்டத்தைச் சேர்ந்தவைதாம்.*

*மகாபாரதத்தில் இம்சையைப் பார்த்து மனம் வருந்திய தர்மரும் கூட தன் தம்பிகளுக்கும், திரௌபதிக்கும் காட்டில் வாழ்ந்த பார்ப்பனர்களுக்கும் உணவுதர தினந்தோறும் மான்களையும் கிருஷ்ண மிருகத்தையும் வேட்டையாடியதாகவும் உள்ளது. பிராமண மன்னன் ரந்திதேவரின் அரண்மனை யில் விருந்தினர்களுக்காக பசு மாமிசங்களைச் சமைப்பதற்கு இரண்டாயிரம் சமையற்காரர்கள் இருந்தார்கள். தினமும் இரண்டாயிரம் பசுக்கள் கொல்லப்பட்டதாகவும் பிராமண விருந்தினர்களின் கூட்டம் அளவுக்கு மீறி இருந்த காரணத்தினால் மாமிசம் குறைவாக இருக்கிற படியால் தயவு செய்து சூப்பை அதிகமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று விருந்தினர்களைச் சமையற்காரர்கள் கேட்டுக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டது என மகாபாரதத்தின் 'வனபர்வம்' கூறுகிறது.*

**மௌரியர் காலத்துக்குப் பின்பும், குப்தர் காலத்திலும் இலக்கிய வடிவம் தரப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட மகாபாரதம், இராமாயணம் ஆகியவை மாட்டிறைச்சி உண்ணும் பழக்கத்துக்குத் தெளிவான ஆதாரங்களைத் தந்துள்ளன.**

*பார்ப்பனர்களுக்கு இறைச்சி, அரிசி, நெய், பால் ஆகியவற்றை வழங்க வேண்டும் என அனுசா சர்பன பர்வதத்தில் நாரதர் அறிவித்துள்ளார். இராமாயணத்தில் பரத்வாஜர் கொழுத்த கன்றை வெட்டிச் சமைத்து உணவு படைத்து இராமனை வரவேற்கிறார்.*

*'மகாவீர சரீதம்' என்ற நூலில் இராமனின் குழந்தைப் பருவவாழ்க்கையைப் பற்றிப் பேசவரும் நூலாசிரியர் பவபூதி (கி. பி700) ஒரு காட்சியை விவரிக்கிறார். இளம்பசுவைக் கொன்று மன்னன் ஜனகன் தந்த உபசரிப்பை ஏற்றுக்கொள்ளும்படி கோபத்திலிருந்த பரசுராமனிடம் வசிஷ்டர் வேண்டிக் கொள்வதுதான் அந்தக்காட்சி. வால்மீகியின் குடிசையில் 'பழுப்புநிற இளம்கன்றின்' விருந்தை, தான் உண்டதாக வசிஷ்டரே சொல்வதாக 'உத்தர ராமசரிதம்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளது.*

*இறைச்சி உணவு மரபை தர்ம சாஸ்திர நூல்கள் தொடர்ந்து ஆதரித்து வந்தன. வேள்வி, சிரார்த்தம், மதுபர்கம் ஆகிய சடங்கு நிகழ்ச்சிகளின் போதும் உயிருக்கு ஆபத்தான வேளைகளிலும் பார்ப்பனர்கள் இறைச்சி உண்டதை பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவரும், ஸ்மிருதிகளுக்கு உரையெழுதிய தர்க்க அறிஞருமான விஸ்வநாத நியாய பஞ்சாணனன் உறுதிப்படுத்துகிறார்.*

***பார்பனர்கள்பார்வையில்பசுவதை:***

*ஹகீம் அஜ்மல் கான் தலைமையின் கீழ் 3.11. 1927 அன்று கூடிய கூட்டத்தில் ஸ்ரீனிவாச*

**வினா:** *அய்யா, தொழிலாளர்களைத் தொழிலில் பங்குதாரர் ஆக்கவேண்டும் என்ற கொள்கையை நீங்கள் கடைபிடித்திருக்கிறீர்களா?*

**விடை:** *தொழிலாளர்களைத் தொழிலில் பங்குதாரராக ஆக்க வேண்டும் என்ற கொள்கையை என் வியாபாரத்தில் 1900-இல் அதாவது 73ஆண்டுகளுக்கு முன்பு அனுசரித்தேன். என் கடையில் இருந்த மூன்று பேர்களைக் கஷ்டக் கூட்டாளிகளாக ஆக்கினேன். அவர்களுக்கு மாதம் தலா 10, 08, 07 சம்பளமாகும். வியாபாரத்திற்கு முதல் ரூபாய் 10, 000 லாபத்தில் முதலாளி என்கின்ற எனக்கு ஒரு பாகம் என்று கஷ்டக் கூட்டாளிகள் மூவருக்கும் ஒரு பாகம் என்று அமுல்படுத்தினேன். அதாவது என் கடையில் வரும் லாபத்தை 49 பாகமாகப் போட்டு ஒரு பாகம் சாமிக் கணக்கும் 16 பாகம் எனக்குப் பணப்பொறுப்பாகவும், 16 பாகம் முதலீட்டுப் பணத்திற்காகவும் மீதி 16 பாகம் கஷ்டக் கூட்டாளிகளுக்கு என்றும் பிரித்துக் கொடுத்தேன். தொழிலாளர் பிரச்சினை தீர இதுவே சிறந்த வழி என அப்போது முதல் கூறி வருகிறேன்.*

**உடையார் பாளையம், 03-06-1973 ல் சொற்பொழிவு**

அய்யங்கார் பேசும்போது முற்காலத்தில் தேவதைகளுக்கு முன் பசுவைப் பலிசெய்து கொண்டிருந்தவர்கள் எனக்கூறினார்.

அம்பாலாவில் நடைபெற்ற இந்துமகாசபையிலும், பம்பாயில் நடைபெற்ற சபையிலும், சுத்திசங்கடன் இயக்கத் தலைவர் டாக்டர் மூஞ்சே தர்மசாஸ்திரத்தின் மூலமாக புலால் உண்ணல் குற்றம் அல்லது அதர்மமென்று கொஞ்சமும் கூறமுடியாது. மேலும் மாமிசம் புசித்து வருவதால் அவர்களின் அநேக சமூகக் கஷ்டங்கள் நிவர்த்தியாகக் கூடியதாயிருக்கிறது என்று கூறுகிறார்.

இந்து தேச சரித்திர நூலில் 1939 எம். எஸ். சுந்தரேச அய்யர் 'பூர்வீக' ஆரியர் தங்கள் சாமான்களை ஏற்றிக்கொண்டு மேய்ச்சல் தரையைத் தேடி இடம் விட்டு இடம் அலைந்தார்கள். இவ் வண்டிகளை எருதுகள் இழுத்தன. பசுக்களையே அவர்கள் செல்வமாகக் கருதினர். பசுவின் இறைச்சியைப் புசித்து வந்தார்கள் என்று கூறுகிறார்.

எஸ். கிருஷ்ண அய்யங்கார் என்பவரும் 'ஆரியர்கள்' பார்லி, கோதுமை முதலிய தானியங்களையும் காய்கறிகளையும் புசித்தனர். இடையிடையே மாமிசமும், ஸோமம் என்னும் ஒரு வகைப் பானமும் உண்டனர் என்றார்.

உங்கள் பிள்ளைகள் அறிவுடையோராகவும், வேதமறிந்தவராகவும் நீண்ட ஆயுளைப் பெற்றவராகவும் இருக்க வேண்டுமானால் நெய் சேர்த்த மாட்டுக்கறி சாப்பிடுங்கள் என்று பிருகதாரண்ய உபநிடதம் குறிப்பிடுகிறது. இதற்கு ஆதி சங்கராச்சாரி உரையும் எழுதியுள்ளார்.

பார்ப்பனர்களால் உயர்த்திப் பிடிக்கப்படும் சுவாமி விவேகானந்தர் 'எனது சிந்தனைகள்' என்ற நூலில் என்ன சொல்கிறார் பாருங்கள்.

"மனிதர்கள் பசியாலும், பட்டினியாலும் செத்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவர்களின் உயிரைக் காப்பாற்ற ஒரு பிடி சோறு கூடத்தராமல் விலங்குகளையும், பறவைகளையும் காப்பாற்றுவதற்காக உணவை வாரிவாரித்தரும் சங்கங்களிடம் எனக்குச் சிறிதுகூட அனுதாபம் கிடையாது. மனிதன் பட்டினியால் சாவதற்கு அவனது கருமங்கள் காரணம் என்று கரும நியதிக்கு நீங்கள் வக்காலத்து வாங்குவதாக இருந்தால் இந்த உலகத்தில் எதற்காகவும் முயற்சி செய்வதோ, போராடுவதோ பயனற்ற வேலை. பசுக்களைக் காப்பாற்றும் உங்கள் வேலையும் அப்படித்தான்'' என்றார் சுவாமிஜி. இதைக்கேட்ட பசுப்பாதுகாப்புப் பிரச்சாரகர் கொஞ்சம் வெட்கம் அடைந்தவராகத் தடுமாறினார்.

பிறகு சமாளித்துக் கொண்டு, "நீங்கள் சொல்வது உண்மைதான். ஆனால் பசு நமது தாய் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றனவே" என்றார். சுவாமிஜி லேசாகச் சிரித்தப்படி "ஆமாம். பசு நம் தாய்தான். எனக்குப்புரிகிறது. வேறு யார்தான் நம்மைப்போன்ற இவ்வளவுபுத்திசாலிகளான பிள்ளைகளைப் பெறமுடியும்" என்றார். - இவ்வாறு 'எனது சிந்தனைகள்" நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது

பசுவின் புனிதத்தன்மை என்பது ஒரு ஏமாற்றுவித்தையே. காரணம் பசுத்தெய்வமோ அதன் பெயரில் ஒருகோயிலோ இருந்ததில்லை. பி. ஜே. பியின் நோக்கம் எல்லாம் பசுவைக் காப்பாற்றுவது அல்ல. மாறாக தலித் மற்றும் முஸ்லீம் மக்களுக்கு எதிரான மனோபாவத்தைச் சாதுரியமாக உருவாக்குவது என்பதையே இது காட்டுகிறது.



# இந்தியாவின் கார்பரேட் நிர்வாகம் ஜாதிகளால் தடுக்கப்பட்டுள்ளதா?

**தமிழில்: பூங்குழலி, யாழ்மொழி**

இந்தியாவின் பங்குச்சந்தைகளில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் மொத்த முதலீட்டில் அய்ந்தில் நான்கு பங்கு முதலீட்டினைக் கொண்டுள்ள இந்தியாவின் 1000 முதன்மை நிறுவனங்களின் நிர்வாகத்தில் ஜாதிப் பன்முகத் தன்மை குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அதிர்ச்சி அளிக்கிறது. ஏனெனில் ஜாதிப் பன்முகத் தன்மையே இல்லை என்பதே ஆய்வின் முடிவாக இருந்தது. 2010-இல் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின்படி, இந்திய பெருமுதலாளித்துவ நிறுவனங்களின் நிர்வாகம் அனைத்தும் தகுதி, திறன், அனுபவம் என்பவற்றைப் புறந்தள்ளி வெறுமனே ஜாதிப்பற்றுடன் மட்டுமே உள்ளன என்பது வெளிவந்துள்ளது.

உலகளவில், இனங்களுக்கு இடையிலான பொருளாதார வேறுபாடு அதிகம் விவாதிக்கப் படுகிறது. இந்தியாவில், ஜாதி அடிப்படையிலான கட்டமைப்புகள் எவ்வாறு சமூகப் பாகுபாட்டையும் பொருளாதாரச் சமமின்மையையும் ஏற்படுத்தி, அதனை நிலை பெறச் செய்கின்றன என்பதை மய்யப்படுத்தி இந்த விவாதம் இருந்தது. தற்கால இந்தியாவில் சமூக, பொருளாதார, பெருந்தொழில் (கார்பரேட்) மற்றும் அரசியல் அதிகாரத்தை நிர்ணயம் செய்வதில் ஜாதி முக்கிய இடத்தை வகிக்கிறது. நுகர்வு, வருமானம், கல்வி, தொழில் மற்றும் வளர்ச்சி விகிதங்களில் ஜாதி அடிப்படையிலான வேறுபாடுகள் இருப்பதை பல ஆய்வுகளும் எடுத்துக்காட்டியுள்ளன. ஆனால், அதேநேரம், பெருந்தொழில் நிர்வாகக்குழுக்களில் **(Corporate Board)** ஜாதியின் தாக்கமும் ஜாதியத் தொடர்புகளின் பாதிப்புகளும் எந்த அளவுக்கு உள்ளன என்பதைப் பற்றி மிகச்சிறிய அளவிலேயே கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகள் அனைத்திலும் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட செய்தி என்னவெனில், இந்தியாவெங்கும் கல்வி, வேலை வாய்ப்பு, ஊதியம், நுகர்வு போன்றவற்றில் ஒடுக்கப்பட்ட ஜாதியினரின் நிலை, பிற ஜாதியினரை விட மிக மோசமாக உள்ளது என்பது. பட்டியல் ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கும் பிற ஜாதியினருக்கும் இடையிலான ஊதிய வேறுபாடு ஏறத்தாழ 21ரூ இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. பணியமர்த்துவதில் உள்ள பாகுபாட்டுடன், தாழ்த்தப்பட்ட ஜாதியினருக்கும் முன்னேறிய ஜாதியினருக்கும் இடையிலான ஊதியவேறுபாடுகள் மற்றும் பணிச்சூழலில் நிலவும் சகிப்பற்றத் தன்மை மற்றும் முன் தீர்மான மனநிலை ஆகியவை நாம் அக்கறை செலுத்த வேண்டிய ஒன்றாக அதிகரித்து வருகிறது.

நமது ஆய்வு, இந்திய பெருந்தொழில் நிர்வாகக் குழுக்களில் **(Corporate Board)** ஜாதிவாரியான கணக்கெடுப்பினை ஆராய்கிறது. ஏனெனில், இந்த பெருந்தொழில் நிர்வாகக்குழுக்களே பெருந்தொழில் அதிகாரம் குவிந்திருக்கும் இடமாகும். இந்தியாவின் பெருந்தொழில்கள் யார் கட்டுப்பாட்டில் உள்ளன என்பதைப் புரிந்து கொள்ள 2010-இல் இந்தியாவில் உள்ள பெருந்தொழில் நிர்வாகக்குழுக்களின் ஜாதிவாரிக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பே நமது ஆய்வுக்குத் துணை செய்கிறது. இது அரசியல் அதிகாரத்துடன் எந்த அளவுக்குத் தொடர்புடையது என்பதற்கு இந்த ஆய்வு சான்று அளிக்கலாம். ஏனெனில், அரசியல் மற்றும் பொருளாதார முடிவுகளை எடுப்பதில் பெருந்தொழில்கள் எந்த அளவுக்கு நெருக்கமான மற்றும் முழுமையான தொடர்பைக் கொண்டுள்ளன என்பதை பல ஆய்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன. இந்தியாவில்

> ஜாதி அமைப்பும் ஜாதி அடிப்படையிலான பாகுபாடும் அதிகாரப் பூர்வமாக சட்ட விரோத மாக்கப்பட்டுள்ளது.

பெருந்தொழில்கள் மீதான கட்டுப்பாட்டில் ஜாதியின் தாக்கத்தைப் புரிந்து கொள்வதற்கான முதற்கட்ட முயற்சியே இந்த ஆய்வு. இந்தியாவில் 60 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இடஒதுக்கீடு என்பது கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சமூகநகர்வு **(Social Mobility)** ஆகியவற்றில் எந்த அளவுக்கு பயனளித்துள்ளது என்பதையும் மறைமுகமாக இந்த ஆய்வு தன் போக்கில் கணிக்கிறது.

ஜாதி என்பது அடிப்படையில் இரண்டு முகங்களை கொண்டுள்ளது வர்ணம் மற்றும் ஜாதி. வர்ணஅமைப்பு என்பது இந்துசமூகத்தை நான்கு தனித்தனியான - ஒன்றிலிருந்து ஒன்று முற்றிலும் வேறுபட்ட - தொழில் அடிப்படையி லான வர்ணங்களாகப் பிரிக்கிறது பார்ப்பனர் கள் (பூசாரிகள் மற்றும் ஆசிரியர்கள்), க்ஷத்ரியர் கள் (போர் வீரர்கள் மற்றும் அரசர்கள்), வைசியர்கள் (வணிகர்கள் மற்றும் கடன் கொடுப்பவர்கள்), சூத்திரர்கள் (அடிப்படை பணியாளர்கள்). வர்ணஅமைப்பின் அடிப்ப டைப்பண்புகளை அப்படியே கொண்டுள்ள ஜாதிஅமைப்பு, அதைவிடச் சிக்கல் நிறைந்த தாகவும் படிநிலைப் படுத்தப்பட்டும் உள்ளது. ஏனெனில் இந்தியாவில் 3000-க்கும் மேற்பட்ட ஜாதிகள் உள்ளன. நமது ஆய்விற்காக ஜாதி அடிப்படையில் இந்து சமூகத்தை வகைப்படுத் துவதில் உள்ள நடைமுறைச்சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, இந்திய மக்களை 4 வர்ணங்களின் அடிப்படையில் வகைப்படுத் துவது தேவையற்ற விவாதங்களை பெருமளவு தவிர்க்கும் என்ற அளவில் அவ்வாறே வகைப்படுத்தியுள்ளோம்.

இந்தியாவில், "பிற்படுத்தப்பட்ட / தாழ்த்தப்பட்ட ஜாதியினர்" என்பது இடஒதுக்கீட்டினைப் பெறும் 3 பெரும் பிரிவுகளான பட்டியல் ஜாதியினர், பட்டியல் பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரை குறிக்கும். சமூகப்படிநிலையின் கீழ் இடத்தில் வைக்கப் பட்டிருப்பது வரலாற்றுரீதியாக "தீண்டத்தகாத வர்கள்" என்று ஒதுக்கப்பட்ட பல்வேறு ஜாதியினர் ஆகும். இவர்கள் சுத்தமற்றவர்களாக கருதப்பட்டு, பொதுக் கட்டமைப்புகளைப் பயன்படுத்த அனுமதி மறுக்கப்பட்டிருந்தனர். அதே நிலையிலேயே தொல்குடியினரான பழங்குடி மக்களும் உள்ளனர். இவர்களே பட்டியல் பழங்குடியினர் என குறிக்கப்பட்டனர்.

ஜாதி அமைப்பும் ஜாதி அடிப்படையிலான பாகுபாடும் அதிகாரப் பூர்வமாக சட்ட விரோத மாக்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை பெற்று சிறிது காலத்திலேயே பட்டியல் ஜாதியினருக்கும், பட்டியல் பழங்குடியினருக்கும் "இடஒதுக்கீட்டினை" அரசு அறிமுகப்படுத்தி யது. பிற்காலத்தில், இடஒதுக்கீடு பெறும் தகுதி வாய்ந்த குழுக்களின் பட்டியல் விரிவுபடுத்தப்பட்டது. மண்டல்குழு பரிந்துரை யின் அடிப்படையில், 1990-ஆம் ஆண்டு பிற பாதிக்கப்பட்ட ஜாதிகள் "பிற பிற்படுத்தப்பட்ட ஜாதியினர்" என்று வகைப்படுத்தப்பட்டனர். பிற பிற்படுத்தப்பட்ட ஜாதியினர் என்பது, சமூகப் படிநிலையில் பட்டியல் ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு மேல் வைக்கப் பட்டிருக்கும் ஜாதிக்குழுக்கள் ஆகும். இந்திய மக்கள் தொகையில் இந்த பிற்படுத்தப்பட்ட / தாழ்த்தப்பட்ட ஜாதியினரின் எண்ணிக்கைக் குறித்த எந்த நம்பகமான மக்கள் தொகைக் கணக்கெடுப்பும் இல்லை எனினும், மண்டல்குழு அறிக்கையின்படி இந்தியாவின் மக்கள் தொகையில் நான்கில் மூன்று பகுதியினராக அதாவது 75% - மாக அவர்கள் உள்ளதாக தெரிய வருகிறது. எனினும், இந்தியாவில் கடந்த 60 ஆண்டு காலமாக நடைமுறைப் படுத்தப்பட்ட இடஒதுக்கீட்டுத் திட்டங்களுக்குப் பிறகும், முன்னேறிய ஜாதியினருக்கும் பிற்படுத்தப்பட்ட / தாழ்த்தப்பட்ட ஜாதியினருக்கும் இடையிலான சமூக - பொருளாதார பிரிவினை எந்த மாற்றமுமின்றி அப்படியே உள்ளது. இந்தியாவில் தற்போது விவாதப் பொருளாக கீழ்கண்டவை உள்ளன

தனியார்துறையில் நிலவும் ஜாதிய பிரிவினைகளை முடிவுக்குக் கொண்டு வரவும் அனைவரையும் உள்ளடக்கியதாக மாற்றவும் தனியார் துறையிலும் ஜாதி அடிப்படையிலான இடஒதுக்கீடு தேவையா?

பிற்படுத்தப்பட்ட / தாழ்த்தப்பட்ட ஜாதியினருக்குள் வாய்ப்புகளைச் சமன்படுத்த அவர்களுக்குள் உள்ள சிறுபான்மை ஜாதியின

ருக்கு உள் ஒதுக்கீடு தேவையா?

தொழில் மற்றும் வணிகச் செயற்பாடுகள் இன்றுவரை வைசிய ஜாதியினரின் ஆதிக்கத்தி லேயே உள்ளன. தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களின் உரிமையாளர்களாக வரலாற்று ரீதியாகவே ஒரு சில ஜாதிக் குழுக்கள் மட்டுமே இருந்து வந்துள்ளனர். அதேபோன்று உயர் நிலைப் பதவிகளும் பணிகளும் எப்போது மே ஒரு சிறிய உலகத்திற்குள் சுருங்கி இருந்தது. இந்தியாவில் பணியமர்த்தலில் வெகுவான பாகுபாடு இருப்பதை இதற்கு முந்தைய ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. தனியார் நிறுவனங் களின் உரிமையாளர்களைப் பற்றிய ஜாதி வாரியான கணக்கு குறித்து குறைவான சான்றுகளே உள்ளன. இருக்கும் சான்றுகளை வைத்துப் பார்க்கும் போது, பட்டியல் ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினரை உரிமை யாளர்களாகக் கொண்ட தனியார் நிறுவனங்கள் மிக்க் குறைவாகவே உள்ளன (அதிலும் நகர்ப் பகுதிகளில்) என்பது தெரிய வருகிறது. தனியார் துறையில் இட ஒதுக்கீடு தருவது குறித்த வாதங்கள் தொழில் மற்றும் வணிகத் துறையினரி டமிருந்து பெரும் எதிர்ப்பைச் சந்தித்து வருகின்றன.

### 1. தற்போது உள்ள ஆய்வறிக்கைகள்

வேலைவாய்ப்புச் சந்தையில் பாகுபாடுகள் குறித்து ஆராய்வதற்கு பெரிதும் பயன்படும் ஆய்வறிக்கை பெக்கர் எழுதிய "பாகுபாடுகளின் பொருளாதாரம்" என்ற அறிக்கையாகும். பெக்கரின் ஆய்வு வெள்ளை இனத்தவரிடையே நிலவும் இனவெறி பாகுபாட்டு மனநிலைக்கும் இன சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாட்டுக்கும் இடையிலான உறவை போட்டிச்சூழலின் அடிப்படையில் ஆய்கிறது. அக்காலத்திய பெரும் பான்மையான ஆய்வறிக் கைகளுக்கு மாறாக, பெக்கர், இன அடிப்படையி லான விருப்பு வெறுப்புகள் என்பவை இனங்களுக்கு இடையிலான தொடர்பாடலின் மீதான அருவருப்பினால் விளைந்தவை என விவரிக்கிறார். இத்தகைய விருப்பு வெறுப்பு மனநிலை வாடிக்கையாளர்கள், சக பணியாளர் கள் மற்றும் முதலாளிகளிடம் இருப்பதினால் அது கருப்பினத்தவருக்கு அளிக்கப்படும் ஊதியத் தில் எத்தகைய பாதிப்பினை ஏற்படுத்துகிறது என்பதை பல்வேறு நடைமுறைச் சான்றுகளின் மூலம் விவரிக்கிறார். தீண்டத்தகாதவர்கள், பெண்கள் அல்லது பிற சிறுபான்மையினர், அவர்களது செயல்திறனுக்கு குறைவானதாகவும்,

> “ தனியார் துறையில் இட ஒதுக்கீடு தருவது குறித்த வாதங்கள் தொழில் மற்றும் வணிகத் துறையினரி டமிருந்து பெரும் எதிர்ப்பைச் சந்தித்து வருகின்றன. ”

பிற ஊழியருக்கு அளிப்பதைவிட குறைவானதா கவும் உள்ள ஊதியத்தையே கோரிய போதிலும், ஒரு முதலாளி அவர்களை பணியமர்த்த மறுப்பது என்பது பாகுபாடேயாகும். இத்தகைய பாகுபாடு, குறிப்பிட்ட முதலாளியின் செலவினத்தை அதிகப்படுத்தி இலாபத்தைக் குறைக்கிறது என்கிறார் பெக்கர்.

செயல்திறனுக்கேற்ற குறைந்தபட்ச ஊதியத்தை அளிக்கும் அடிப்படையில் பணியமர்த்தி அதன் மூலம் தங்கள் இலாபத்தை பெருக்கும் முதலாளிகளோடு ஒப்பிடுகையில் பாகுபடுத்தும் மனநிலையினால், குறைந்த ஊதியத்திற்கு முன்வரும் பிற இனத்தவரை பணியமர்த்த மறுக்கும் முதலாளிகள் போட்டிச் சூழலில் பின்தங்கி விடுகின்றனர். புதிது புதிதாக நிறுவனங்கள் உருவாகும் சூழல் உள்ள தொழில் துறைகளில் இவ்வாறு பாகுபாட்டுடன் நடந்து கொள்ளும் முதலாளிகள் தோற்றுப் போகின்றனர்.

பெக்கர் கருத்தியலை ஆதரித்து ஆரோ என்பவர் 1972 - 73 ஆம் ஆண்டில் முதலாளிகளின் பார்வையில் பாகுபாட்டினை விவரித்தார். அவரைப் பொருத்த வரையில், முதலாளிகள் பாகுபாடு காட்டுவதற்குக் காரணம் பாகுபாட்டின் மீதான விருப்பம் அல்ல. மாறாக அவர்களது தெளிவின்மையே காரணம் என்கிறார். இதைத்தவிர இனவெறியை சாராத பாகுபாடுகளுக்குக் காரணமாக முழுமையற்ற தகவல்களும் இருக்கலாம் என சொல்லப் படுகிறது. இதனை கூறும் பெல்ப்ஸ், தனது கருத்தியலை, பாகுபாடு குறித்த புள்ளியியல் கருத்தியல் என்கிறார். ஆரோவும் பெல்ப்சும் தங்கள் கருத்தியல்களை உருவாக்கியது என்பது பணிக்கு விண்ணப்பித்தவர்கள் பற்றி முதலாளிகளுக்கு போதிய தகவல்கள் தெரியாது என்ற அனுமானத்தின் அடிப்படையில் ஆகும்.

> ஜாதி அமைப்பு, உடல் உழைப்பிற்கு குறைந்த மதிப்பும் மூளை உழைப்புக்கு கூடுதல் மதிப்பும் அளிக்கிறது. இதனால் ஜாதி அமைப்பில் உடல் உழைப்பிற்கான மரியாதை என்பது துளியும் இன்றி போனது.

இதைத் தவிரவும், சமூக பழக்கங்கள் போன்ற பிற காரணங்களும் பாகுபாடுகளுக்கு காரணமாக இருக்கலாம் என அகெர்லோப் கூறுகிறார்.

வேலை வாய்ப்புச் சந்தையில் நிலவும் பாகுபாடுகள் குறித்த இந்த கருத்தியல்கள் அனைத்திற்கும் நுட்பமான பொருளாதார அடிப்படை உள்ளது. அத்துடன் முதலாளிகளின் பாகுபடுத்தும் மனநிலைக்கான காரணங்களை விளக்குவதை இவை மய்யமாக கொண்டுள்ளன. அப்படி கொடுக்கப்பட்ட பல்வேறு விளக்கங்களில் தனிமனித விருப்பம், வேலைவாய்ப்புச் சந்தை குறித்த போதுமான தெளிவின்மை, சமூகப்பழக்கங்கள் போன்றவை சாத்தியமானவையாகத் தோன்றுகின்றன. இவற்றில் சில கருத்தியல்கள் மட்டுமே இந்தப் பாகுபாடுகள் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய பாதிப்புகளை பற்றி மேலும் ஆராய்கின்றன. பெக்கர் (1971), ஆரோ (1972, 1973), அகெர்லோப் (1976, 1980), பெல்ப்ஸ் (1972) ஆகியோரின் கருத்தியல்கள் ஜாதி அடிப்படையிலான பாகுபாடுகளை ஆராய போதுமானவையாக இல்லை. ஜாதி அமைப்பில் உள்ள பொருளாதார நிலை என்பது தனி மனித விருப்பம் சார்ந்ததல்ல. தனி மனித விருப்பம் என்ற கருத்தியல் ஜாதி அமைப்பில் அடிபட்டுப் போகிறது.

ஏனெனில், ஜாதி அமைப்பில் ஒரு தனி மனிதர், அவரது திறன் அல்லது பயிற்சியின் அடிப்படையில் ஒரு பணிக்கு அமர்த்தப்படுவதில்லை. மாறாக அவரது பெற்றோரின் சமூக நிலையின் அடிப்படையிலேயே அது தீர்மானிக்கப்படுகிறது. அத்துடன் ஜாதி அமைப்பு, உடல் உழைப்பிற்கு குறைந்த மதிப்பும் மூளை உழைப்புக்கு கூடுதல் மதிப்பும் அளிக்கிறது. இதனால் ஜாதி அமைப்பில் உடல் உழைப்பிற்கான மரியாதை என்பது துளியும் இன்றி போனது. மேலே விளக்கியவற்றின் அடிப்படையில் பார்த்தால், பெக்கர் (1971), ஆரோ (1972, 1973), அகெர்லோப் (1976, 1980), பெல்ப்ஸ் (1972) ஆகியோரின் எளிமையான விளக்கங்களை கடந்து ஒரு முழுமையான கருத்தியல் கண்டறியப்பட வேண்டும் என்பது புரிகிறது.

## தொழிலாளர் பாகுபாட்டு ஆய்வுகள்

ஜாதி அமைப்பின் பொருளாதார தாக்கம் பலராலும் மிக விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இந்தியாவின் நகர்ப்புற அமைப்பில் ஜாதி அடிப்படையிலான பாகுபாடுகள் பற்றிய ஆய்வுகளில் குறிப்பிடத்தக்கவை லம்பார்ட் (1963), மோரிஸ் (1965), வின்ச் (1969), பானர்ஜி மற்றும் நைட் (1985), பூரூவா மற்றும் அய்யர் (2005), மாதேஸ்வரன் மற்றும் அட்டேவெல் (2007) மற்றும் இதோ (2009) ஆகியவை ஆகும். இந்தியாவின் நகர்ப்புற வேலை வாய்ப்புச் சந்தையில் பட்டியல் ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் எதிர்கொள்ளும் ஊதியப் பாகுபாடு குறித்து இந்த ஆய்வுகள் ஆராய்ந்துள்ளன.

பெட்ரண்ட் மற்றும் முல்லைநாதன் (2004) ஜாதிய பாகுபாட்டை அளவிட கள ஆய்வுகளை மேற்கொண்டனர். தோராட் மற்றும் அட்டேவெல் (2007) மேற்கொண்ட ஆய்வு, 2005-க்கும் 2007-க்கும் இடையிலான காலக்கட்டத்தில் இந்தியாவின் முக்கியமான தேசிய மற்றும் வட்டார நாளிதழ்களில் வெளியான வேலை வாய்ப்பு விளம்பரங்களை அடிப்படையாகக் கொண்டது. அந்த விளம்பரங்களுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு வந்த பதில்களின் அடிப்படையில், ஒரு தலித்தின் விண்ணப்பத்திற்கு சாதகமான பதில் கிடைப்பதற்கான வாய்ப்பு ஒரு ஆதிக்க ஜாதி இந்துவோடு ஒப்பிடும் போது வெறும் 0.67% மட்டுமே இருந்தது. ஒரு முஸ்லிம் விண்ணப்பதாரர் சாதகமான பதிலை பெறுவதற்கான வாய்ப்பு இன்னமும் கீழாக வெறும் 0.33 % ஆக மட்டுமே உள்ளது. பானர்ஜி குழுவினரின் ஆய்வு தில்லியில் உள்ள மென்பொருள் நிறுவனங்கள் மற்றும் கால் சென்டர்களிடையே நடத்தப்பட்டது. மென்பொருள் நிறுவனங்களின் வேலைவாய்ப்பில் பட்டியல் ஜாதியினர், பட்டியல் பழங்குடியினர் மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு எதிரான பாகுபாடுகள் குறித்து குறிப்பிடத்தக்க ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் கால் சென்டர் வேலைகளில் சாதகமான பதில்

*கிடைப்பது குறிப்பிடத்தக்க அளவு குறைவாகவே இருந்தது. சென்னை உயர் நிலை பணிகளில் சித்திக் (2011) மேற்கொண்ட ஆய்வும் தொராட் மற்றும் அட்டேவெல்லின் ஆய்வு முடிவினை உறுதிப்படுத்தியது.*

*இந்தியாவில் உள்ள பல்வேறு ஜாதிக் குழுக்களிடையே நிலவும் சொத்து சமமின்மை குறித்தும் சில ஆய்வுகள் உள்ளன. ஸசாரியாஸ் மற்றும் வகுலாபரணம் (2011) ஆகியயோரின் ஆய்வு 1991-92 மற்றும் 2002-03 ஆகிய காலங்களின் அகில இந்தியக் கடன் மற்றும் முதலீட்டுக் கணக்கெடுப்பின் அடிப்படையில் அமைந்தது. அதன்படி கிராமப்புறம், நகர்ப்புறம் ஆகிய இரண்டு இடங்களிலுமே பட்டியல் ஜாதியினர் / பட்டியல் பழங்குடியினர் மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை விட முன்னேறிய ஜாதியினர் அதிக சொத்தை அனுபவிக்கின்றனர் என்பது உறுதிபடுத்தப்பட்டது. இந்த ஆய்வு மற்றுமொரு வேதனையான செய்தியை வெளிக்கொணர்ந்தது. 1991-அய் ஒப்பிடும் போது 2002-ஆம் ஆண்டிற்கான பட்டியல் பழங்குடியினரின் சராசரி சொத்து அளவு குறைந்திருந்தது. எனினும், அண்மையில் நாட்கோவ்ஸ்கா குழுவினர் (2012) மேற்கொண்ட ஆய்வின்படி, 1983 தொடங்கி 2004-05 வரையான காலக்கட்டத்தில் பிற ஜாதியினரோடு ஒப்பிடுகையில் பட்டியல் ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினரின் கல்வி தகுதி பெறும் அளவு உயர்ந்திருப்பதையும் ஊதிய வேறுபாடுகளின் சராசரி குறைந்திருப்பதையும் கண்டறிய முடிந்தது.*

*இது தொடர்புடைய மற்றுமொரு ஆய்வினை மேற்கொண்ட முன்ஷி மற்றும் ரோசென்ஸ்விக் (2009) இந்தியாவில் பணி நகர்வு* **(Job mobility)** *குறைவாக இருப்பதை ஆவணப்படுத்தியுள்ளனர். சமூகநிலை நகர்வு* (Social mobility) *குறித்த பெரும்பாலான ஆய்வுகள், தாழ்த்தப்பட்ட ஜாதிகளில் சமூக மற்றும் பொருளாதார நிலை நகர்வு என்பது மிகவும் குறைவாகவே இருப்பதை உறுதிப்படுத் தியுள்ளனர். ஆனால், இந்தியாவில் மேற்கொள் ளப்பட்ட பெரும்பாலான ஆய்வுகள் பல்வேறு ஜாதிகளிடையே நிலவும் கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற்றில் பாகுபாடு, நுகர்வு மற்றம் சொத்தில் சமமின்மை ஆகியவை குறித்தே உள்ளன. எங்களுக்குத் தெரிந்த வரையில், இந்திய பெருந்தொழில் நிர்வாகக் குழுவில் பன்முகத் தன்மை பற்றிய எந்த ஆய்வும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அதற்கான முயற்சியே இந்த ஆய்வு.*

> **“ சமூகநிலை நகர்வு குறித்த பெரும்பாலான ஆய்வுகள், தாழ்த்தப்பட்ட ஜாதிகளில் சமூக மற்றும் பொருளாதார நிலை நகர்வு என்பது மிகவும் குறைவாகவே இருப்பதை உறுதிப்படுத் தியுள்ளனர். ”**

### *2. தரவுகளும் வழிமுறையும்*

#### *தரவுகள்*

OSIRIS *தரவுக் களஞ்சியத்தின் அடிப்ப டையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (* OSIRIS *தரவு களஞ்சியம் என்பது உலக அளவில் 125-க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள, பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள் பற்றிய முழுமையான பொருளாதார தகவல்களை கொண்ட களஞ்சியமாகும்) இந்த தரவுக் களஞ்சியத்தில், இந்திய மற்றும் உலக பங்கு சந்தைகளில் பட்டியலிடப்பட்டுள்ள 4000 இந்திய நிறுவனங்கள் பற்றிய தகவல்கள் உள்ளன. இந்த 4000 இந்திய நிறுவனங்களில், 2010-ஆம் ஆண்டின் மொத்த சொத்துக் கணக்கின்படி முதல் 1000 நிறுவனங்களை நமது ஆய்வுக்கு எடுத்துக் கொண்டோம். கடந்த 2010-ஆம் ஆண்டு கணக்கின்படி தேசிய பங்கு சந்தையிலும், மும்பை பங்கு சந்தையிலும் அய்ந்தில் 4 பங்கு முதலீட்டினை இந்த நிறுவனங்களே வைத்துள் ளன. பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் இரண்டையுமே நமது ஆய்வு கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளது. தரவுக் களஞ்சியத்திலிருந்து எடுக்கப்பட்ட தரவுகளில், ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களின் நிர்வாகக்குழுவில் இடம் பெற்றுள்ளவர்கள் அடையாளம் காணப்பட்டு, இரட்டை கணக்கு வருவது தவிர்க்கப்பட்டது. அதேபோன்று, நிர்வாகக் குழுவின் அங்கமாக குறிக்கப்பட்டுள்ள நிறுவனச் செயலர்களின்* (Corporate Secretaries) *பெயர்களும் நீக்கப்பட்டன. ஏனெனில் அவர்களில் பெரும்பாலானோருக்கு நிர்வாகக் குழுவில் வாக்களிக்கும் உரிமை இருப்பதில்லை. இந்தத் தரவுக் களஞ்சியம்*

> ஒரு சமூகம் எந்த அளவு இனங்களின் அடிப்படையில் பிளவுபட்டு இருக்கிறதோ, அந்த அளவு பொதுக்கட்டமைப்புகள் மற்றும் சேவைகளை கூட்டுறவாக வழங்குவது கடினமாகிறது.

பெருந்தொழில் நிர்வாகக்குழு உறுப்பினர்களின் பெயர்களை அளிக்கிறது. இதுவே நமது ஆய்வின் தொடக்கப்புள்ளியாக உள்ளது. இந்தியாவில், குடும்பப் பெயர் (Surname) வழக்கமாக ஜாதித் தொடர்பை குறிப்பதாகவே உள்ளது. குடும்பப்பெயரின் அடிப்படையில் நாங்கள் பெருந்தொழில் நிர்வாகக்குழு உறுப்பினர்களை நான்காக வகைப்படுத்தினோம்

அ. முன்னேறிய ஜாதியினர் (பார்ப்பனர், க்ஷத்ரியர் மற்றும் வைசியர்கள்)

ஆ. பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்

இ. பட்டியல் ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்

ஈ. பிறர் (வெளிநாட்டு இயக்குநர்கள்)

ஜாதியை கண்டறிய முடியாத வகையில் அவர்களின் பெயர் இருந்தால் (எ-கா கே. இராமகிருஷ்ணன்), எங்களுக்கு உள்ள சமூகத் தொடர்புகளின் மூலமாக அவரது ஜாதி வகையை அறிய வேண்டி இருந்தது. இந்தப் பணி கடினமானதாக இருக்கவில்லை. ஏனெனில் இவர்கள் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் இந்தியச் சமூகத்தில் முக்கியமான இடத்தில் இருந்தனர். இத்தகைய சூழல் நாங்கள் தேர்ந்தெடுத்த 1000 நிறுவனங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்களில் 15 % மட்டுமே இருந்தது. மேலும் நாங்கள் இந்த தரவுக்களஞ்சியத்திலிருந்து முதலீடு மற்றும் தொழில்வகை பற்றிய விவரங்களையும் சேகரித்தோம். இந்தியப் பெருந்தொழில் நிறுவனங்களில் முதலீட்டின் அடிப்படையிலும், தொழில் வகையின் அடிப்படையிலும் ஜாதி பன்முகத் தன்மை குறித்த ஆய்விற்கு இது தேவைப்பட்டது.

### வழிமுறை

பொருளாதார நிறுவனங்களிலும் அரசுகளிலும் இன பன்முகத் தன்மையின் தாக்கங்களை அளவிட பன்னாட்டு அளவில் பல்வேறு ஆய்வறிக்கைகள் வெளியிடப் பட்டுள்ளன. அமெரிக்காவில் இன பன்முகத் தன்மையின் விளைவுகள் குறித்தும் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகளின் உட்கருத்தாக வெளியான செய்தி என்னவெனில், ஒரு சமூகம் எந்த அளவு இனங்களின் அடிப்படையில் பிளவுபட்டு இருக்கிறதோ, அந்த அளவு பொதுக்கட்டமைப்புகள் மற்றும் சேவைகளை கூட்டுறவாக வழங்குவது கடினமா கிறது. மாறாக, இனத்தின் அடிப்படையில் கூட்டு சேர்வதும், பிறகு அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரத்தை அடைய இனத்தின் அடிப்படை யில் ஒன்றோடு ஒன்று போட்டியிடுவதும் நடக்கும். சமூக அறிவியல் மற்றும் அரசியல் ஆய்வுகளில் பயன்படுத்தப்படும் பன்முகத் தன்மை குறியீடு ப்ளாவ் குறியீடு என வழங்கப்படுகிறது. பல இனங்களும் கலந்துள்ள ஒரு மக்கள் தொகையிலிருந்து இரண்டு பேரை திட்டமிடாமல் தேர்ந்தெடுப்பதற்கான சாத்தியத் தை அது வழங்குகிறது. ப்ளாவ் தனது கணக்கிடு தலை சமூக கருத்தியல் ஆய்விற்கு அர்ப்பணித் தார். ப்ளாவ் குறியீடு இவ்வாறு கூறுகிறது

$$D=1-\Sigma_j p_j^2$$

இதில் D என்பது பன்முகத்தன்மையை குறிக்கிறது. $p_j$ என்பது மொத்த மக்கள் தொகையில் j என்னும் குழுவின் பங்கு. நமது ஆய்வில், பெருந்தொழில் நிர்வாகக்குழுக்களின் மொத்த உறுப்பினர்கள் என்பதே மொத்த மக்கள் தொகை. இதில் அனைவரும் ஒரே குழுவை (ஜாதியை) சேர்ந்தவர்கள் எனில் D (பன்முகத் தன்மை) என்பது 0-வாக இருக்கும். மற்றொரு புறம், ஒரு நிர்வாகக் குழு பல்வேறு ஜாதியின ரையும் கொண்டது எனில் னு (பன்முகத் தன்மை) என்பது 1 என்ற மதிப்பிற்கு நெருக்கமாக இருக் கும். எனவே னு (பன்முகத் தன்மை) அதிகமாக இருப்பது என்பது பன்முகத் தன்மை அதிகமாக உள்ளதை காட்டும்.

### 3. சோதனையின் முடிவுகள்

இந்தியாவின் உச்ச 1000 நிறுவனங்களின் நிர்வாகக்குழுவின் சராசரி அளவு 9 உறுப்பினர் களைக் கொண்டதாக இருந்தது. அதில் ஏறத்தாழ 88 % பேர் உள்வட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். 12% பேர் சுதந்திரமான இயக்குநர் களாக இருந்தனர். ஜாதி அடிப்படையில் இந்த நிர்வாகக் குழு உறுப்பினர்களை வகைப்படுத்திப் பார்த்தால், ஏறத்தாழ 93% பேர் முன்னேறிய

ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். 46 % பேர் வைசியர்களாகவும் 44 % பேர் பார்ப்பனர்களாகவும் உள்ளனர். பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வெறும் 3.8 % -ஆகவும், பட்டியல் ஜாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் வெறும் 3.5 % -ஆகவுமே உள்ளனர். இதன் மூலம் இந்திய பெருந்தொழில் நிறுவனங்களின் நிர்வாகக்குழுக்கள் முன்னேறிய ஜாதியினரைக் கொண்ட சிறு உலகத்தின் ஆதிக்கத்தில் உள்ளது என்பதும் பன்முகத்தன்மை அற்று உள்ளது என்பதும் தெளிவாகிறது.

பெருந்தொழில் நிறுவனங்களின் நிர்வாகக் குழுவில் ஜாதியின் அடிப்படையிலான ப்ளாவ் குறியீடு 0-வாக உள்ளது. அதாவது பன்முகத்தன்மையே இல்லை. அதாவது அனைத்து பெருந்தொழில் நிறுவனங்களின் இயக்குநர்களும் ஒரேஜாதியை அதாவது முன்னேறிய ஜாதியை சேர்ந்தவர்களாக உள்ளனர்.

ஜாதி பன்முகக் குறியீட்டினை கணக்கிட்டால், 70 % பெருந்தொழில் நிறுவனங்களின் ப்ளாவ் குறியீடு 0-வாக உள்ளது. அதாவது பன்முகத் தன்மையே இல்லை. அதாவது அனைவரும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள். 5.6 % இந்திய பெருந்தொழில் நிறுவனங்களின் நிர்வாகக் குழுவில் கால் பங்கிற்கும் குறைவானவர்களே வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள். முக்கால் பங்கிற்கும் அதிகமானவர்கள் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள். 24.7 % நிறுவனங்களின் நிர்வாகக் குழுவில் பாதிக்கும் குறைவானவர்களே வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள். மீதி பாதிக்கும் மேலானவர்கள் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள். ஒரே ஒரு நிறுவனம் மட்டுமே ப்ளாவ் குறியீடு 1 கொண்டுள்ளது. அதாவது சரி விகிதத்தில் அனைத்துப் பிரிவு ஜாதியினரும் கலந்து உள்ளனர். இந்தப் பெருந்தொழில் நிறுவனங்களின் வாடிக்கை யாளர்களை பிரதிநிதிப்படுத்துவதாக இந்த நிறுவனங்களின் நிர்வாகக் குழு உள்ளதா என்ற கேள்வியை இந்தக் கண்டறிதல்கள் எழுப்புகின்றன. இந்திய மக்கள் தொகையில் 75 % பிற்படுத்தப்பட்ட, பட்டியல் ஜாதி மற்றும் பட்டியல் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

தொழில் வகையின் அடிப்படையிலும் ஜாதிய பன்முகத்தன்மையை நாங்கள் ஆராய்ந்தோம். 0.10-க்கும் குறைவான ப்ளாவ் குறியீடு கொண்ட நிறுவனங்களாக, அதாவது 10ரூ-க்கும் குறைவாக பிற ஜாதியினரைக் கொண்ட நிறுவனங்களாக, அடிப்படை உலோகங்கள், இரும்பு மற்றும் எஃகு (Steel) பொருட்கள், ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள், இரசாயனங்கள், இயற்கை எரிவாயு கடத்துதல் மற்றும் கட்டுமானப் பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்கள் உள்ளன. வணிக மற்றும் சேவை நிறுவனங்கள் உற்பத்தி நிறுவனங்களை விட குறைந்த ஜாதி பன்முகத் தன்மையினைக் கொண்டுள்ளன. வங்கித் துறையில் ஜாதி பன்முகத் தன்மை மிக குறைவாகவே உள்ளது.

## 4. முடிவுரை

இந்த ஆய்வு இந்தியாவின் பெருந்தொழில் நிறுவனங்களின் நிர்வாகக் குழுவில் ஜாதியப் பன்முகத் தன்மை குறித்த ஆய்வினை மேற்கொண்டது. இதற்கு இந்திய பங்குச் சந்தைகளில் 2010-ஆம் ஆண்டு பட்டியலிடப் பட்ட 1000 நிறுவனங்களை எடுத்துக்கொண்டது. இந்த ஆய்வின் முடிவுகள் இந்திய பெருந்தொழில் துறையில் ஜாதியப் பன்முகத்தன்மையே இல்லை என்பதைக் காட்டுகின்றன. அத்துடன் ஏறத்தாழ இந்தியப் பெருந்தொழில் நிறுவனங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்களில் 65% பேர் ஒரேஜாதி வகையை சேர்ந்தவர்களாக உள்ளனர் முன்னேறிய ஜாதியாக உள்ளனர் இதன் மூலம் அது ஒரு சிறிய இறுக்கமான உலகம் என்பது தெளிவாகிறது. பெருந்தொழில் உலகில், சமூக வலைப்பின்னல் முக்கியப்பங்கை ஆற்றுகிறது. இந்தியப்பெருந்தொழில் நிர்வாகக்குழுக்கள் ஜாதி சார்பின் அடிப்படையிலான பழைய மனிதர்களின் கையிலேயே உள்ளது. தகுதிக்கோ திறனுக்கோ அனுபவத்திற்கோ அங்கு மதிப்பில்லை. குறைவான பிரதிநிதித்துவத்திற்கு தகுதிக்குறைவே காரணம் என்ற வாதம் இதனால் உடைகிறது. வலைப் பின்னலில் ஜாதி முக்கிய பங்கு வகிக்கிறது. இந்திய பெருந்தொழில்களின் சிறிய உலகம் தங்களுடைய ஜாதி உறவுகளிடம் மட்டுமே தொடர்பு வைத்துள்ளது. இது ஒரு முக்கியக் கேள்வியை எழுப்புகிறது. இந்திய நிறுவனங்களில் ஒரே ஜாதியைச் சேர்ந்த இயக்குநர்கள் இணைந்து செயற்படுவதற்கான சாத்தியம் உள்ளதா? இந்த சிறிய உலகம், கணக்காய்வாளர்கள் (ஆடிட்டர்) தேர்ந்தெடுப்பதிலும் பங்கு வகிக்கிறதா? இவை வருங்காலத்தில் ஆய்வுக்கான முக்கிய கேள்விகளாக உள்ளன.

*நன்றி:* D Ajit (dayanana@unbc.ca), Han Donker (donker@unbc.ca) and Ravi Saxena (saxenar@ unbc.ca) are associated with University of Northern British Columbia, Canada. ( Economic & Political Weekly - August 11, 2012 )

# திராவிடர் உடைகள்

**- அதி அசுரன்**

> **உலகில் வேறு எந்த நாட்டிலும் எந்த மதத்திலும் பட்டு ஆடைகளை உயர்வான ஆடையாகப் பார்ப்பதில்லை. இந்து மதத்தில் மட்டுமே இந்துக்களிடம் மட்டுமே இருக்கும் ஆடை மூடநம்பிக்கை தான் இந்த பட்டுமூடநம்பிக்கை.**




*பிராமணர்கள் கருப்புமானின் தோல், க்ஷத்திரியர்கள் புள்ளிமானின் தோல், வைசியர்கள் வெள்ளாட்டுத்தோல் இவைகளை ஆடைகளாக அணிய வேண்டும். பிராமணர்கள் சணப்ப நூல், க்ஷத்திரியர்கள் பட்டு நூல், வைசியர்கள் வெள்ளாட்டின் மயிர் இவற்றையும் ஆடைக்காகப் பயன்படுத்தலாம்.*

*- மனுசாஸ்திரம் அத்தியாயம் 2, ஸ்லோகம் 41*

உடைக்கு தேவையான தோலைப் பயன்படுத்துதில்கூட - நூலைப் பயன்படுத்துவதில்கூட ஜாதிப்பாகுபாட்டை உருவாக்கியது ஆரியப்பண்பாடு. அதிலும் சூத்திரனுக்கு எந்தத் தோலோ, நூலோ அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மனுவின் காலம் தொடங்கி 20 நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. உடையில், உடை தயாரிக்கும் நூற்களில், உடை தைக்கப்படும் ஸ்டைலில் எவ்வளவோ மாற்றங்கள் வந்துவிட்டன. பார்ப்பனர்களே விரும்பினாலும் இன்று கருப்புமானின் தோலில் உடை தைக்க முடியாது. எந்த க்ஷத்திரியனும் புள்ளிமானின் தோலை உரித்து உடை தைக்க முடியாது. இப்படி மாற்றங்கள் வந்துவிட்டன. இன்றைய நிலையில் பட்டு நூலில் தயாராகும் உடைகளே பார்ப்பன அந்தஸ்த்தைக் கொண்டுள்ளன.

வீட்டில் கைலியும், நைட்டியும் சூத்திர உடையாக உள்ளது. அலுவலகங்களுக்குச் செல்லும் போது ஃபார்மல் சட்டைகள், ஜீன்ஸ் பேண்ட், காட்டன் சேலைகள், சுடிதார் என்பவை பிற்படுத்தப்பட்ட உடைபோல உள்ளது. நம் வாழ்வின் முக்கிய விழாக்கள் என்றால் அதாவது திருமணம், பிறந்த நாள், திருமண நாள், பொங்கல் விழாக்கள், பண்டிகைகள் இவற்றில் பட்டுச்சேலைகளும், பட்டு வேட்டிகளும் தான் இடம் பிடிக்கின்றன. இவை பிராமண உடையாக இன்றும் நம் அனைவர் மனதிலும் முதலிடம் பிடித்துள்ளன.

ஒரு ஆணோ பெண்ணோ கணினி மென்பொருள் துறையில் வெளிநாட்டில் பணியாற்றுபவராக இருக்கட்டும், அறிவியலில் ஆராய்ச்சியில் பட்டங்களைப் பெற்ற மிகப் பெரும் ஆராய்ச்சியாளராக இருக்கட்டும், அணுவைப் பிளந்து ஆராய்ச்சி, மரபணுக்களையே மாற்றும் படிப்பு, பணி என எவ்வளவு

சிறந்த பணிநிலையில் இருப்பவர்களும் - அந்தப் பணியிடங்களில் இருக்கும் போது ஜீன்ஸ், ட்ராக் சூட், லோயர், லெகிங்ஸ், ஸ்லீவ்லெஸ் என எல்லா நவீனமுறை ஆடைகளையும் அணிந்தவராக இருந்தாலும் அவர்களது திருமணம் என்று வரும்போது இந்து மதத்தை அப்படியே உள்வாங்கி - பட்டுச்சேலை, பட்டு வேட்டியில் தான் காட்சி தருகின்றனர். உலகில் வேறு எந்த நாட்டிலும் எந்த மதத்திலும் பட்டு ஆடைகளை உயர்வான ஆடையாகப் பார்ப்பதில்லை. (இந்தியாவில் இருக்கும் மதம் மாறியவர்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டாம்) இந்து மதத்தில் மட்டுமே இந்துக்களிடம் மட்டுமே இருக்கும் ஆடை மூடநம்பிக்கை தான் இந்த பட்டுமூடநம்பிக்கை. குளிர் அதிகமாக உள்ள மேலைநாடுகளின் உடையான பேண்ட், ஜீன்ஸ் இவற்றை வெப்ப நாடான தமிழ்நாட்டில் வாழ்பவர்கள் ஏன் அணிய வேண்டும்? என்று கேள்வி கேட்கும் அறிவியல் அறிஞர்கள், ஓமகுண்டம், புகை, நெருப்பு இவற்றுக்கு மிக அருகில் பட்டுச்சேலையையும், பட்டு வேட்டியையும் அணிந்து வியர்வையில் குளிப்பவர்களைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்பதேயில்லை. காரணம் நம் மூளையில் ஏறியுள்ள இந்து மத நஞ்சு.

போத்தீஸ் பட்டில் மணமக்களின் பெயர்களையும் சேர்த்து நெய்து தருகிறார்கள். சிறந்த ஐ.ஏ.எஸ் அதிகாரி எனப் பெயர்பெற்ற திரு.சகாயம் அவர்களின் முயற்சியால் கோ ஆப்டெக்ஸில் மணமக்களின் உருவத்தையே நெய்து கொடுக்கும் வசதி தற்போது அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. ஒரு பட்டுப்புடவையை ஒரு இலட்ச ரூபாய்க்கு கல்யாணப் புடவையாக எடுக்கும் குடும்பங்கள் ஏராளமாக உள்ளன. கம்யூனிஸ்ட் போராளிகள் சிவப்பு வண்ணத்தில் பட்டுப் புடவையும், பெரியார் இயக்கத்தினர் கருப்பு வண்ணத்திலும் பட்டுச்சேலைகளையும், கருப்புக் கரை போட்ட பட்டு வேட்டிகளையும் அணிகின்றனர்.

இந்து மதத்தின் தலைவன் மறைந்த சங்கராச்சாரி சந்திரசேகரேந்திரர் தனது தெய்வத்தின் குரல் இரண்டாம் பாகத்தில்,

“இந்து மதத்தைச் சேர்ந்தவர் என்றால் சில அடையாளங்கள் உண்டு. வேஷ்டி, சேலை, நெற்றிப்பொட்டு இவையெல்லாம் தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன”

என தெளிவாகக் கூறியுள்ளார்.

> **“ தோளில் துண்டு அணிவதற்குக்கூட மிகப்பெரிய விலைகொடுத்துப் போராடிய திராவிடர் இயக்கத்தின் இந்தத் தலைமுறையினர் - இந்து மதத்தின் அடையாளமான பட்டினை தமது இல்ல விழாக்களிலும் அணிவதுதான் மிகவும் வேதனை. ”**

பட்டையும், பொட்டையும் இன்றும் தவிர்க்காமல் வாழ்வோரே! நம்மைப் பற்றி, நம் சகோதரிகளைப் பற்றி - பெண் இனத்தைப் பற்றி ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் இந்த ஆண்டு 2013 ஜனவரியில் டெல்லியில் செய்தியாளர்களிடம் 'பெண்கள் வீட்டு வேலை செய்வதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும்' என்று தெரிவித்துள்ளார். இதைத்தான் மனுசாஸ்திரம் சொல்கிறது.

“பாத்திர முதலியவற்றை சுத்திசெய்வது, வீடுவிளக்குவது, தேவபூஜை முதலியற்றுக்கு உதவி செய்வது, அடுக்களைக் காரியம், வீட்டுப்பாத்திரம், படுக்கை முதலானவற்றைப் பார்ப்பது இவை முதலிய அவசியமான காரியங்களைப் பெண்களுக்குக் கற்பித்து அவளுடைய கவனம் வேறிடத்தில் செல்லாதபடி செய்க” மனு- அத்தியாயம் 9, ஸ்லோகம் 11

செத்துப்போன சீனியர் சங்கராச்சாரி தனது தெய்வத்தின் குரல் இரண்டாம் பாகத்தில்,

“ஒருவீடு என்றிருந்தால் சமையல், வீட்டைச் சுத்தம் செய்வது, குழந்தைகளை வளர்ப்பது என்றிப்படி பல காரியங்கள் உள்ளன. இயற்கையாக பெண்களே இவற்றிற்கு ஏற்றவர்கள்” என்று கூறியுள்ளார்.

மேலும் குங்குமம் தயாரிப்பது, கஸ்தூரி மஞ்சள் தயாரிப்பது இதுவே பெண்களுக்கு உரிய தொழில்கள் என்றும் அதே தெய்வத்தின்குரல் 2 ஆம் பாகத்தில் கூறியுள்ளார்.

தற்போது உயிரோடு இருக்கும் ஜெயேந்திரர் என்ற சங்கராச்சாரிகூட 1981 இல் 'வேலைக்குச் செல்லும் பெண்கள் ஒழுக்கங் கெட்டவர்கள்' என அறிக்கை கொடுத்தார்.

> இன்றும் பல கிராமங்களில் ஆதிக்க ஜாதியினரைக் கண்டவுடன் தாழ்த்தப்பட்ட மக்கள் தோளில் இருக்கும் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொள்ளும் நிலை இருக்கிறது.

இப்படி 2000 வருடங்களுக்கு முன்பு மனுசாஸ்திரம் சொல்வதைத்தான் இன்று 2013-இலும் ஆர்.எஸ்.எஸ் தலைவன் சொல்கிறான். சங்கராச்சாரிகளும் சொல்கிறார்கள். சராசரி ஆணும் சொல்கிறான். ஒட்டு மொத்த சமூகமும் சொல்கிறது. இப்படி பெண் இனத்தின் விடுதலைக்கு எதிராக - நம் சமுதாயத்தின் சரி பாதிக்கு எதிராக ஒட்டு மொத்த மக்களின் மனநிலையையே மாற்றி - நம்மைச் சிறைப்படுத்தியுள்ளது இந்து மதம். அந்த இந்து மதத்தின் அடையாளத்தை - மத அழிப்பாளர்கள், பகுத்தறிவாளர்கள், பொதுவுடைமைப் போராளிகள், சாதி ஒழிப்புப் போராளிகள் வெறுத்து ஒதுக்க வேண்டும்.

தோளில் துண்டு அணிவதற்குக்கூட மிகப்பெரிய விலைகொடுத்துப் போராடிய திராவிடர் இயக்கத்தின் இந்தத் தலைமுறையினர் - இந்து மதத்தின் அடையாளமான பட்டினை தமது இல்ல விழாக்களிலும் அணிவதுதான் மிகவும் வேதனை.

நாட்டுக் கோட்டை நகரத்தில் ஒன்றான கானாடுகாத்தானில் தென் இந்தியாவுக்கே முதன்மையான நாகசுர வித்வான் திரு. பொன்னுசாமி அவர்கள் நாகசுரம் வாசிக்கும் போது வியர்த்தால் துடைத்துக் கொள்ள ஒரு சிறு துண்டைக்கூட வைத்துக்கொள்ள முடியவில்லை. அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி அந்த நிகழ்ச்சியில் போராடி அந்தக் கலைஞரை தோளில் துண்டு அணிந்து வாசிக்கச் செய்தார். இன்றும் பல கிராமங்களில் ஆதிக்க ஜாதியினரைக் கண்டவுடன் தாழ்த்தப்பட்ட மக்கள் தோளில் இருக்கும் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொள்ளும் நிலை இருக்கிறது. இந்து மதக் கட்டளைகளை அடிபிறழாமல் நடைமுறைப் படுத்திவந்த திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் ஒடுக்கப்பட்ட சமுதாயப் பெண்கள் மேலாடை அணிவதற்கு தடை இருந்ததையும், மாபெரும் புரட்சி நடத்தியே அங்கு பெண்கள் மேலாடை அணிய முடிந்தது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமல்ல பல பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த கிராம ஆண்களும் அண்மைக்காலம் வரை மேல்சட்டை இல்லாமல்தான் உலவி வந்தனர். சட்டையே எடுத்துக் கொடுத்தாலும் அதைத் தோளில் போட்டுக்கொண்டு நடந்து செல்பவர்களை கிராமங்களில் இன்றும் காணலாம். நமது மனநிலையையே ஆடை இல்லாத மனநிலையாகக் கட்டமைத்தது இந்த இந்து மதம்.

எனவே இந்துப் பண்பாட்டிற்கு எதிராக உடையிலும் புரட்சியை மேற்கொள்ள வேண்டியுள்ளது. சேலையும் வேட்டியும் இந்துப்பண்பாடு என்று சங்கராச்சாரி சொல்கிறார். அதேசமயம் இவை தமிழ்ப் பண்பாட்டின் அடையாளங்கள் என்று தமிழ்த் தேசியம் பேசும் சில பண்பாட்டுக் காவலர்கள் வேட்டி, சேலை, பாவாடை, தாவணிகளுக்காக போராடுகிறார்கள். எனவே தமிழர்களின் உடை எது என்ற ஆராய்ச்சியும் தேவைப்படுகிறது. சங்க இலக்கியத்தில் பத்துப்பாட்டில் வரும் குறிஞ்சிப்பாட்டில் கபிலர் பாடல் இது.

புள் ஆர் இயத்த விலங்கு மலைச் சிலம்பின்

வள் உயிர் தெள் விளி இடை இடைப் பயிற்றிக்

கிள்ளை ஓப்பியும் கிளை இதழ் பறியாப்

பை விரி அல்குல் கொய் தழை தைஇப்

குறுக்கே இருக்கும் மலையெங்கும் பறவைகளின் ஒலி நிறைந்திருந்தது. அங்கே கூர்மையான ஓசையோடு தெளிந்த சொற்களை இடை இடையே கூறி கிளிகளையும் ஓட்டினோம். அதோடு பாறையில் குவித்து வைத்த மலர்களின் வெளிப்புற இதழ்களைப் பறித்து, தழையாடைக்குத் தக்கவாறு சரி செய்து கட்டி அணிந்து கொண்டோம் என பெண் ஒருத்தி சொல்கிறாள்.

நற்றிணையில் 390 வது பாடல்

வாளை வாளின் பிறழ நாளும்

பொய்கை நீர்நாய் வைகு துயில் ஏற்கும்

கை வண் கிள்ளி வெண்ணி சூழ்ந்த

வயல் வெள் ஆம்பல் உருவ நெறித் தழை

ஆம்பல் மலர், தழைகளைக் கொண்டு தைத்த தழையாடை உடுத்தி விழாவுக்குச் செல்லப் போகிறேன் என தலைவி ஒருத்தி பாடுவதாக உள்ள பாடல் இது.

நற்றிணையில் 204 வது பாடல்

தளிர் சேர் தண் தழை தைஇ நுந்தை

குளிர் வாய் வியன் புனத்து எல் பட வருகோ

குறுஞ் சுனைக் குவளை அடைச்சி நாம் புணரிய

நறுந் தண் சாரல் ஆடுகம் வருகோ

மெல்லிய தழையாடை உடுத்தியவளே, கதிரவன் மறையும் அந்திப்பொழுதில் உன்னைச் சந்திக்க வரவா? என்கிறான் தலைவன்.

இந்த சங்க இலக்கியப் பாடல்கள் மட்டுமின்றி அகநானூறு, குறுந்தொகை ஆகிய இலக்கியங்களிலும் பெண்கள் இலை தழைகளைத்தான் ஆடையாகக் கொண்டிருந் தனர் என்பதற்கு ஏராளமான சான்றுகள் கொட்டிக்கிடக்கின்றன. தமிழர் பண்பாட்டை மீட்க வேண்டும் என்றால் இலை தழைகளைத் தான் அணிய வேண்டும். தமிழர்கள் மட்டுமல்ல அந்தக் காலத்தில் வாழ்ந்த அனைத்து இனங் களும் அந்த தழையாடை யுகத்தினைத் தாண்டித் தாண்டித்தான் தற்போதைய ஆடை முறைகளுக்கு வந்திருக்க வேண்டும். காலத்திற்கேற்றவாறு ஆடை முறைகள் மாறிக் கொண்டே வந்திருக்க வேண்டும். அப்படி எனில் சில வருடங்களுக்கு முன்பு இருந்த பாவாடை, தாவணிகளை மட்டும் தமிழர் பண்பாடு என்ற பெயரில் காப்பாற்றத் துடிக்க வேண்டாம். தமிழர்களுக்கு எதிரான இந்துப் பண்பாட்டைத் திணிக்க வேண்டாம்.

> இந்து - வேத - ஆரியப் பண்பாட்டிற்கு எதிராக வாழ விரும்பும் தமிழ்த்தேசிய - தெலுங்கு தேசிய - கன்னட, மலையாள, இந்தியாவிலுள்ள அனைத்து தேசிய இன மக்களும் முதலில் இந்த வேட்டி, சேலை, பாவாடை, தாவணி போன்ற இந்து மத அடையாளங்களை விட்டொழிக்க வேண்டும்.

இந்து - வேத - ஆரியப் பண்பாட்டிற்கு எதிராக வாழ விரும்பும் தமிழ்த்தேசிய - தெலுங்கு தேசிய - கன்னட, மலையாள, இந்தியாவிலுள்ள அனைத்து தேசிய இன மக்களும் முதலில் இந்த வேட்டி, சேலை, பாவாடை, தாவணி போன்ற இந்து மத அடையாளங்களை விட்டொழிக்க வேண்டும். முக்கியமாக நமது இல்லங்களில் நடைபெறும் திருமணம் போன்ற விழாக்களில் இந்து மத அடையாளங்களை உடைத்தெறிய வேண்டும். நம்மை அடிமைப்படுத்திய இந்து மத அடையாளத்தைத் தவிர, அணிவதற்கு வசதியான வேறு எந்த உடையையும் அணியலாம்.

ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவான - வசதியான உடைகளை அணியலாம். பேண்ட், சட்டை (ஞயவே, ளூாசைவ) அல்லது ஜீன்ஸ், டிசர்ட் அணியலாம். இதிலும் கூட ஆணுக்கு ஒரு மாதிரியும், பெண்ணுக்கு வேறு மாதிரியும் தைக்க வேண்டியதில்லை. பெண்ணைக் கவர்ச்சி பொம்மையாகக் காட்டும் மேல்சட்டைகள் தான் தற்போது விற்பனை செய்யப்படுகின்றன. அதைத் தவிர்த்து ஆண்களுக்கு தயாராகும் மேல்சட்டை களையே பெண்களும் அணியத் தொடங்கலாம். தஞ்சையில் உள்ள பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவிகள் 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆண்களைப் போலவே (ஞயவே, ளூாசைவ) ஆடை அணிந்து வருகின்றனர். எனவே நாம் சொல்வது புதிய கண்டுபிடிப்பு அல்ல. பல ஆண்டுகளாக ஆண்களும், பெண்களும் பயன்படுத்தி வரும் ஆடை முறை. இருபாலருமே சூழலுக்கேற்ப - அணிவதற்கு வசதியாக கைலி, நைட் பேண்ட், ட்ராக்சூட், லோயர், டிசர்ட்களை அணியலாம். உடைகளில் ஏற்றத்தாழ்வு பார்க்காமல் எந்த உடையையும் எந்த இடத்திலும் பயன்படுத்தத் தயங்க வேண்டாம். கைலியோடு திருமணம் செய்யலாம். ட்ராக் சூட்டோடு பொங்கல் விழா கொண்டாடலாம். பொதுக்கூட்டத்துக்குப் போகலாம். குளிர்காலத்தில் ஜீன்ஸோடு உறங்கலாம். அறிவுக்கும் மானத்திற்கும் எதிரான பட்டுகளைத் தவிர்ப்போம். ஆடைகளில் பாலின - பொருளாதார சமத்துவத்தைப் படைப்போம்! ●

# மரண சாசனப் பதிவு

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆரியப்பண்பாட்டின் பிடியில் சிக்கியிருந்த திராவிடர்களை சுயமரியாதை கொண்ட மனிதர்களாக மானமும் அறிவும் கொண்ட மனிதர்களாக மாற்றிய தோழர் பெரியாரின் பிறந்த நாள் செப்டம்பர் 17. இந்த நாளில், பெரியாரது சிலைக்கு மாலை அணிவித்தல், மரியாதை செய்தல் என்பவைகளைவிட பெரியார் பார்வையில் ஏதாவது ஒரு சிறிய பணியையாவது செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் கூடிய சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத் தோழர்கள் ஒரு முடிவு செய்தனர். அதுதான் மரண சாசனப் பதிவு.

ஏற்கனவே பார்ப்பனப் பண்பாட்டுப் பிடியில் சிக்கிச் சீரழியும் தமிழர்களின் வாழ்வில் கூடுதல் படையெடுப்பாக - அந்நிய மதமான இந்து மதத்தின் வேதங்கள் கூறும் வாழ்வியலை - இந்தித்திணிப்பு, சமஸ்கிருத வாரம், சமஸ்கிருதப் பண்பாட்டுத் திணிப்பு என மத்திய அரசும் தொடர்ச்சியாகத் திணித்து வருகிறது.

இந்தச்சூழலில் திராவிடர் பண்பாட்டுப் புரட்சியாளர்கள் பெரியார் பிறந்தநாளை வெறும் சடங்காகத் தொடராமல், பண்பாட்டுத்தளத்தில் ஒரு சிறு செயலையாவது செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த மரணசாசனப் பதிவை மேற்கொண்டனர்.

மத உணர்வு கொண்டவர்களின் மனம் புண்படுதலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிற இச்சமுகத்தில் மதச்சார்பு இல்லாதவனின் உணர்வுகள் ஏற்றுக்கொள்ளப்படுவதேயில்லை

வாழ்கிற காலத்தில் ஜாதி, மத உணர்வுகளைக் கடந்து வாழும் மனிதர்கள் தங்கள் குடும்பத்தின், உறவினரின் நம்பிக்கைக்கு எதிரான வாழ்வியலை பின்பற்றினாலும் - எப்போதும் மதஉணர்வு கொண்ட குடும்பத்தினரின் நலனுக்கு எதிரான எந்தவொரு செயலையும் செய்திருக்க மாட்டார்கள். ஆனால் அப்படிப்பட்ட பெரியார் தொண்டர்களை அவர்களின் வாழ்நாளுக்குப் பிறகு இறுதி நிகழ்வில் அதே உறவினர்கள் ஜாதி, மதச் சாயம் பூசி, இழிவுபடுத்தி, உடலோடு சேர்த்து கொள்கையையும் புதைத்து விடுகிறார்கள்.

இப்படிப்பட்ட இழிவிலிருந்து பெரியாரியல்வாதிகள் தங்களைத் தாங்களே காத்துக்கொள்ள, எவ்வித ஜாதி, மதச் சடங்குகளும் அற்ற முறையில் தங்களது இறுதி நிகழ்வுகளை நடத்திக்கொள்ளும் பொருட்டு, தங்கள் மரண சாசனத்தை விருப்ப ஆவணமாக சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய முடிவெடுத்தனர். வாழும் காலத்தைப் போலவே இறப்பிலும் நாங்கள் ஜாதியற்றவர்கள், மதம் அற்றவர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள விழைந்தனர்.

செப்டம்பர் 17 தோழர் பெரியாரின் 136 வது பிறந்த நாளில் பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் காலை 10 மணியளவில் 10 பெண்கள் உட்பட சுமார் 50 தோழர்கள் தங்கள் மரண சாசனத்தைப் பதிவு செய்தனர் ..இந்த பதிவுகள் இனி மாவட்டம் தோறும், ஆண்டு தோறும் உயரும், தொடரும்..

அ.ப.சிவா, சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம், 98430 68294



விருப்ப ஆவணம் (Will Deed)

2013ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10ஆம் நாள்.




ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு
காட்டாறு, 1 / 810, முத்தமிழ்நகர், நத்தம் சாலை, திண்டுக்கல்-624003. *kaattaaru2014@gmail.com*